



பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper






# உதயன்

விலை ரூபா 3-50

சுடர் 5: பிரமோதூத ஹூ சித்திரை மீ 3 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 றமழான் பிறை 19 (16-04-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 61

## தமிழர் பிரச்சினையை தீர்ப்பதில் ஜனாதிபதி உறுதியுடன் இருக்கிறார்

### அறிவிப்பு விரைவில் வரும் என்கிறார் பாலகுமார்

யாழ்ப்பாணம், ஏப் 16

தமிழர் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றை ஜனாதிபதி எடுத்துள்ளார் என்பதைஅவருடைய பேச்சில் இருந்து உணர முடிந்தது. பெரும் மாற்றங்கள் குறித்த அவரது அறிவிப்பு மிக விரை வில்வெளியிடப்படலாம் என் பதை ஊகிக்க முடிந்தது.

இப்படிக் கூறினார் ஈரோஸ் செயலதிபர் திரு. வே பால குமாரன்.

ஜனாதிபதி ஆர். பிரேம தாசாவுடன் நடத்திய பேச் சுக்கள் குறித்து நேற்று உத யன் செய்தியாளருக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:

கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் பல தடவை கள் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி வந்தோம். அப் போது பேசியவற்றிற்கும் இம் முறை பேசியவற்றிற்கும் வித் தியாசம் உண்டு.

இந்தியப்படை வெளியேறி யது- மாகாணசபை நடத்தி யவர்கள் நாடுவிட்டு ஓடியது- மாகாண சபை செயல் இழந் தது- தமிழ் மக்களின் வலி வுள்ள சக்தியான விடுதலைப் புலிகள் வெளி வந்தது- இந்த சூழ்நிலையில் இம்முறை பேச்சு நடந்தது.

ஆறாவது சரத்து நீக்கல் தேர்தல் நடத்தல்- வடக்கு- கிழக்கில் அமைதி நிலையைப் பராமரித்தல்— பாதுகாப்புப் படையினரின் அத்துமீறல்கள்- எம் இயக்க தோழர்கள் மலை யகத்தில் கைதானது ஆகிய விடயங்களே இம்முறை முக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### 6 ஆவது சரத்து விவகாரம்

## எதிர்க்கட்சித் தலைவர்களுடன் ஈரோஸ் பேச்சு நடத்தும்

ஆறாவது சரத்துக்கள் திருத்தம் குறித்து அடுத்த வாரம் கொழும்பில் சகல எதிர்கட்சிகளின் தலைவர் களுடன் பேச்சு நடாத்த இருக்கிறோம்.

இப்படிக் கூறினார் ஈரோஸ் செயலதிபர் திரு. வே. பால குமாரன்

அவர் மேலும் தெரிவித்த தாவது:

அரசியல் அமைப்பின் ஆறா வது திருத்தச் சட்டத்தினால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட் டுள்ள விடயம் குறித்து ஜனா திபதியிடம் பல தடவை எடுத்துக் கூறியுள்ளோம்.

இந்த திருத்தத்தின் அவசி யம் குறித்தும் அதற்கு ஆத ரவு வேண்டியும் அடுத்தவாரம் எதிர்க்கட்சிகளின் தலைவர் களுடன் பேச்சு நடத்த இருக் கிறோம்.

தனித்தனியாக ஒவ்வொரு கட்சித் தலைவர்களுடனும் பேச்சு நடத்தவுள்ளோம். நானும் எம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ள ஏற்பாடாகி இருக்கின்றது. இப்படி அவர் கூறினார்.

(இ-3)

## பிரபா - பாலகுமார் சந்திப்பு; முடிவு விரைவில் தெரியும்!

யாழ்ப்பாணம், ஏப். 16

தமிழீழ விடுதலைப் புலி கள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் — ஈரோஸ் செயலதிபர் திரு. வே. பால குமாரன் சந்திப்புப் பற்றி எவ்வித நிச்சயமான முடிவும் இன்னும்எடுக்கப்பட வில்லை.

எனினும் இரண்டொரு நாட் களில் இது பற்றிய தீர்க்க மான முடிவுகள் வெளியா கும் என எதிர்பார்க்கப்படு கிறது.

கடந்த 31 ஆம் திகதி ஈரோஸ் செயலதிபர், விடு தலைப் புலிகளின் தலைவ ருக்கு கடிதம் ஒன்றைஅனுப்பி யிருந்தார்!

அந்தக் கடிதத்துக்குரிய பதில் கடிதம் கடந்த எட் டாம் திகதி திரு. பாலகுமா ரனுக்குக் கிடைத்தது. கடி தத்தில் விடுக்கப்பட்ட கோரி க்கைகள் குறித்து சில முடிவு களை எடுக்க வேண்டியுள்ள தால், முடிவுகளைச் செய்த பின்னர் தொடர்பு கொள்வ தாகப் பதில்கடிதத்தில் அறி விக்கப்பட்டுள்ளதாகக் கூறப்

[5 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அப்ப... அவையளுக்கு புது வருட கைவியளம் கைக்கு விலங்கு பூட்டுகிறதாய் வந் திட்டுது எண்டு சொல் லுங்கோ...!

## பட்டதாரிகளுக்கு வேலை வழங்க பாரிய தொழில் வாய்ப்புத் திட்டம்!

### தயாரிக்கப்படுவதாக அமைச்சர் லலித் தகவல்

கொழும்பு, ஏப்ரல் 16

பட்டதாரிகளுக்கு உரிய தொழில் வாய்ப்புகளை ஏற் படுத்திக் கொடுப்பதற்காக பாரிய தொழில் வாய்ப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டு வருகிறது.

இத்தகவலை கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித் தார்.

பல்கலைக்கழக பிரவேசத் திற்குத் தகுதி பெறக்கூடிய பெறுபேறுகளைப் பெறும் சகல மாணவர்களுக்கும் உயர் கல்வி பெற வாய்ப்பளிப்பது என முடிவு செய்யப்பட்டிருக் கிறது.

இதன்படி வருடந்தோறும் சுமார் 35 ஆயிரம் மாணவர் கள் உயர் கல்வி வசதி பெறு வார்கள்.

இவர்கள் தமது உயர் கல் வியை முடித்துக்கொண்டதும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டிய தேவை ஏற் படும்.

வருடந்தோறும் இந்தளவு எண்ணிக்கையானோர் உயர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## புதுவருடத் தினத்தன்று தங்கக் கடத்தல் பிடிபட்டது!

### எயார் லங்கா ஊழியர்கள் கைது!!

புதுவருடத் தினத்தன்று 60 லட்சம் ரூபா பெறுமதி யான தங்கக் கடத்தல் பொலீஸாரின் திடீர் வேட் டையின் போது அகப்பட் டது.

கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வெளியே வைத்தே இக்கடத்தல் கண்டு பிடிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக மூவர் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களில் இருவர் எயர் லங்கா ஊழியர்கள். மற்றவர் விமான நிலைய ஊழியர்.

இக்கடத்தல் சம்பவம் தொடர்பாக பொலீஸார் விசாரணை நடத்தி வருகின் றனர். (ஒ)

## தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து சிங்களப் பொலிஸார் 3 நாட்களில் மாற்றம்!

### பிரபா - ஹமீத் சந்திப்பில் காணப்பட்ட இணக்கம் இதுவே!

யாழ்ப்பாணம், ஏப். 16

தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து சிங்களப் பொலீஸார் இடமாற் றம் செய்யப்படுவது தொடர்பாக மேலதிக தகவல்கள் வெளியாகியிருக் கின்றன.

இதன்படி, வடக்கு, கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து முழு சிங்களப் பொலீஸாரும் மூன்று நாட்களுக்குள் இடமாற்றம் செய் யப்படுவர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும், ஸ்ரீலங்கா அமைச்சர் ஜனாப். ஏ. ஸி. எஸ் ஹமீத்துக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போது இதற்கான இணக்கம் காணப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தகவல் வெளி யிட்டன.

தமிழர்கள் மட்டும் வாழும் பகுதிகளில் இருந்து முழுச் சிங் கள பொலீஸாரும் இடமாற் றம் செய்யப்படுவர் என்றும்-

அதேவேளை சிங்கள மக்கள் வாழும் வவுனியா, திருகோ ணமலை போன்ற பகுதிகளில் சொற்ப அளவு சிங்களப் பொலீஸார் கடமை புரிவர் என்றும் தெரிய வந்தது.

வடபதிக்குத் தேவையான தமிழ்ப்பொலீஸார் தற்போது பற்றாக்குறையாக இருப்ப தாக தெரிவிக்கப்பட்டது. அதுவே சிங்களப் பொலீ ஸாரை இடமாற்றம் செய்வ தில் தாமதம் ஏற்படக் கார ணம் என்றும் கூறப்பட்டது.

(ஒ-உ)

### 50 தீவிரவாதிகள் விடுதலை!

கொழும்பு, ஏப் 16

தமிழ்- சிங்கள புதுவருடத் தன்று 50 தென்பகுதி தீவிர வாதிகள் விடுவிக்கப்பட்ட னர்.

பொலநறுவைப் பகுதியில் வைத்து இவர்கள் விடுவிக்கப் பட்டனர் என்று தெரிவிக்கப் பட்டது. (ஒ)

### நோன்பு திறக்கும் நேரம்

16-04-1990
ஸஹர் முடிவு 4-28
நோன்பு திறக்கும் நேரம் 6-19

## வல்வெட்டிப் பகுதியில் புதிய பொலீஸ் நிலையம்?

யாழ்ப்பாணம், ஏப் 16

வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையம் வல்வெட் டியில் உள்ள ஓரிடத்தில் அமைக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

இதற்கான இடத்தை விடுதலைப் புலிகள் தெரிவு செய்து ஒதுக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த இடத்தில் இன்னும் இரண் டொரு தினங்களில் புதிய பொலீஸ் நிலையம் அமைக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. (உ-9)

### சுப நேரம்

16-04-1990

சுபநேரம்:
12-04 முதல் 01-34 வரை
இராகுகாலம்
07-34 முதல் 09-04 வரை
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## சட்டவிரோத இணைப்பு; மின் தாக்கி இளைஞர் பலி!

வவுனியா, ஏப். 16

சட்டவிரோதமாக மின் சாரம் பெற்ற கம்பியைத் தெரியாமல் பற்றிப்பிடித்த தனால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகினார்.

பம்பைமடுவைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந் தையாகிய தர்மலிங்கம் பாலச்சந்திரன் (25 வயது) என்பவரே இவ்வாறு மரண மானவர் ஆவார்.

மரணமானவர் கடந்த ஞாயிறு காலை தோட்டத் திற்குச் சென்று தண்ணீர் கட்டிய வேளை அருகிலிருந்த வாழை மரத்தின் இலையைப் பற்றிப்பிடித்துள்ளார்.

அவர் தமக்குத் தெரியாம லேயே மரத்தோடு மூடிய படி தொய்வாகச் சென்ற மின்கம்பியும் சேர்த்து கைப் பிடிக்குள் பிடித்ததால் மின் தாக்குதலுக்கு இலக்கானார்.

அருகிலிருந்த மனைவி ஓடி வந்து அவரைக் காப்பாற்ற முயன்றபோது மனைவியும்

(5ஆம் பக்கம் பார்க்க)

### ஆலயங்களை திருத்துவதற்கு ரூ. 20 லட்சம்!

வடக்கு- கிழக்கு மாகாணத் தில் சேதமடைந்த வழிபாட் டுத் தலங்களை புனரமைக்க 20 லட்சம் ரூபா பணத்தை வடக்கு - கிழக்கு மாகாண சபை ஒதுக்கியுள்ளது.

### ஏ.எஸ்.பிக்களாக பதவி உயர்வு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 4 பொலீஸ் இன்ஸ் பெக்டர்களுக்கு உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. திரு. ஆர். கோபாலகிருஷ்ணன் திரு எஸ். சதிர்சாயநாதன், திரு. எஸ். சிறிதரன், திரு. எஸ் ஜெயக்குமார் ஆகியோருக்கே பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது (உ-3)

### தமிழ்ப் பிரதேசம் எங்கும்

## அன்னை பூபதி நினைவாக எழுச்சிமிகு நிகழ்ச்சிகள்!

யாழ்ப்பாணம், ஏப். 16

அன்னை பூபதி உண்ணா நோன்பிருந்த நினைவுதின எழுச்சி நிகழ்வுகளின் கடைசி நான்கு நாட்கள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்றுதொடக்கம் வடக்கு- கிழக்கின் சகல மாவட்டங் களிலும், ஊர் ஊராக உண்ணாவிரத நிகழ்ச்சிகளும் நினைவுக் கூட்டங்களும் நடைபெறவுள்ளன.

இதன்பொருட்டு முக்கிய நகரங்கள் உட்பட ஈழத் தமிழ்ப் பிரதேசங்கள் எங்கும் இப்போதே விழாக் கோலம் போடத் தொடங்கிவிட்டன. யாழ்ப்பாணம், திருகோண மலை, வவுனியா, மட் டக்களப்பு ஆகிய நகரங்கள் எழுச்சியை வெளிப்படுத்தும் விதத்தில் கவர்ச்சிகரமாக அலங்கரிக்கப்பட்டு வருகின் றன.

வடக்கு-கிழக்கின் வீதிகள், சந்திகள், முடக்குகள் எங்கும் அன்னை பூபதியின் படம் வைக்கப்பட்டு, எழுச்சிக்கீதங் கள் ஒலித்த வண்ணம் இருக் கிறது.

பல இடங்களில் ஏற்கனவே உண்ணாவிரத நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இன்று தொடக்கம் உண்ணா விரதமும் நினைவு நிகழ்ச்சி களும் மிகப்பெரிய அளவில் இடம்பெற இருப்பதாக உத யனின் வெளியூர்ச் செய்தியா

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்க புதிய திட்டம்!

திருகோணமலை, ஏப் 16

தமிழ் எழுத்தாளர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கும் திட்டம் ஒன்றை வடக்கு- கிழக்கு மாகாண சபை செயற்படுத்த இருக்கிறது.

இதற்கு இணங்க பிரசுர மான தமிழ் நூல்களில் தகு தியானவற்றைத் தெரிவு செய்து, அவை ஒவ்வொன்றி லும் தலா 300 பிரதிகளை வடக்கு - கிழக்கு மாகாண சபை வாங்கி உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நூல் நிலையங்களுக்கும்- கல்விப் பணிப்பாளரின் கீழ் வரும் பாடசாலை நூலகங்க ளுக்கும் அன்பளிப்புச் செய்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### புத்தாண்டில் வர்த்தக வங்கியில்

## சேமிப்பு சான்றிதழ்கள் அதிக அளவில் விநியோகம்!

யாழ்ப்பாணம், ஏப் 16

இலங்கை வர்த்தக வங்கி யின் யாழ். கிளையில் புதுவ ருடத்தன்று ஐநூறுக்கும் அதி கமானோருக்கு சேமிப்பு சான் றிதழ்கள் வழங்கப்பட்டன.

அன்றைய தினம் சேமிப்புச் சான்றிதழைப் பெறுவதில் அனேகமானோர் சிரத்தை காட்டியதைக் காணக்கூடிய தாக இருந்தது.

வங்கியில் அன்றைய தினம் காலையில் புத்தாண்டு சலு கைகள் மற்றும் பரிசுகளை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற் றது.

நல்லை ஆதீனம் குருமகா சந்நி தானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான ஆதீனகர்த்தா துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ் ஆயர் இல்லத்தைச் சேர்ந்த அருட் திரு. செல்வரஜ அடிகள் ஆகியோரும், வங்கியின் பழைய, வாடிக்கையாளர்க ளும், குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தனர்.

நிகழ்ச்சியில் வரவேற்புரை நிகழ்த்திய வங்கி முகாமையா ளர் திரு. எஸ். இராகவன் தமது உரையில் கூறியதா வது:-

பல இன்னல்களுக்கு மத்தி யிலும் கடந்த காலத்தில் சிறப்பான சேவைகளை எமது வங்கி மக்களுக்கு ஆற்றியிருக் கிறது. பணமோ, சொத்துக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**சஞ்சிகை விற்பனைக்கு**

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியலாளன் செப்/டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

**கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)**

கறுப்பு (பிலிமத்) சேவல் குஞ்சுகள் (17-4-1990) செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க இல 9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில்) [3264]

**விற்பனையாகிக் கொண்டிருக்கிறது**

சோதிட மலர் புத்தாண்டுச் சிறப்பிதழ், புத்தாண்டுப் பலன்கள் இன்னும் பல சோதிட விஷயங்கள் அடங்கியுள்ளது. விலை ரூ 10/ கிடைக்குமிடம், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். வெளியீடு திருக்கணித நிலையம், சாவகச்சேரி. (3256)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

Hyline வெள்ளை, சிவப்பு, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு(புலிமத்) சேவற் குஞ்சுகள் 17-4-90 (செவ்வாய்க்கிழமை) யும் Golden Com-et பிறவுன் பேட்டுக்குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் 18 – 4 –90 புதன்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில் (3267)

**நெசவாளர் தேவை**

மின்தறி நெசவில் குறைந்தது 2 வருட அனுபவம் உள்ள பெண் நெசவாளர் உடன் தேவை. நேரில் வரவும். யூனியன் பவர்லூம் 190ம் கட்டையடி, நுணாவில் சாவகச்சேரி. [3245]

**தவறிவிட்டது**

கறுப்பு உடுப்புபாக் யாழ்-சாவகச்சேரி பிரதான வீதியில் தவறிவிட்டது கிடைத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (12921)

3 லொறி அந்தாட்சி புத்தகங்கள் தவறிவிட்டது கிடைத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (12924)

**ரைப்பிங் சேவை**

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/4206]

**சேவை**

சிறந்த முறையில் விடியோ படம் பிடித்துக் கொள்ளவும் பாடல்கள் பதிவு செய்து கொள்ளவும். நாடுங்கள்:, பாரத் விடியோ சென்ரர் 51/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/4256)

**புலமைப்பரிசில் பரீட்சை**

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வகுப்புகள் (புதிய பிரிவு) ஆரம்பமாகியுள்ளன சனி, ஞாயிறு மு.ப. 10 – 12, புதன் 2 00– 4.00 நாளாந்த வகுப்புகளும் ஆரம்பமாகியுள்ளன. மாதிரிப் பயிற்சி, விடையுடன். விற்பனைக்குண்டு. விலை ரூபா–25 00 புதிய கல்வி. நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம். (3254)

**Spoken English**

Practice Makes Perfect Series 1–7 ஆங்கிலம் வாசித்து விளங்கப் பேசஎழுதஉதவும் கைநூல்கள் தயாரிப்பு S. B. Iyar கிடைக்குமிடம் 12, வைமன் வீதி, நல்லூர். (12319)

**றோனியோ**

றோனியோ தட்டச்சு மற்றும் சகல அச்சு வேலைகளும் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொள்ள தயா அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா சந்தி) (4133) (சி/4129

---

# பதவி வெற்றிடம்

மட்டுப்படுத்தப்பட்ட
கிளிநொச்சி கூட்டுறவு பாற்பொருள்
உற்பத்தி விற்பனைச் சங்கம்

**சில்லறைப் பண்டசாலை முகாமையாளர் தரம் - 11**

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றது.

**தகைமைகள் வருமாறு:-**

அ) கல்வித் தராதரம்: க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி.

ஆ) பயிற்சி : கூட்டுறவு வேலையாளர் (சாதாரணதர) தராதரப் பத்திரம்.

இ) அனுபவம் : இரண்டு வருடகால அனுபவம்

ஈ) வயது : 1990 – 05 – 01 ஆம் திகதியன்று 22 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். (அரச/கூட்டுறவுத்துறையில் கடமையாற்றுபவர்களுக்கு இக்கட்டுப்பாடு பொருந்தாது)

உ) வதிவிடத் தகைமை: 1990 – 05 – 01ஆம் திகதிக்கு முன்னதாக ஆகக் குறைந்தது 1 வருட காலமாவது கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தர குடியிருப்பாளராக இருந்திருக்க வேண்டும்

சம்பள விபரம்:

மாதாந்தம் — 225 — 460
12. 50 x 8 – 15 x 7

மேலதிகமாக கூட்டுறவு ஊழியருக்கு வழங்கப்படும் சகல படிகளும் வழங்கப்படும்.

மொத்த ஆரம்பச் சம்பளம்:
ரூபா. 255 + (780) ரூ. 1035/- ஆகும்.

முழுப்பெயர், முகவரி, வயது, கல்வித் தகைமை, பயிற்சி, அனுபவம் ஆகிய விபரங்களுடனும் கிராம சேவை அலுவலரின் நற்சாட்சிப்பத்திரத்தினதும், கல்விச் சான்றிதழ்களினதும் பிரதிகளுடனும் விண்ணப்பங்கள் 1990 மே 01 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால்மூலம் பொது முகாமையாளர், மட்டுப்படுத்தப்பட்ட கிளிநொச்சி கூட்டுறவு பாற்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அரச / கூட்டுறவு துறைகளில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள் உரிய ஸ்தாபன தலைவர்கள் மூலமாக அனுப்பப்படல் வேண்டும்.

**தலைவர்,**
கிளிநொச்சி கூட்டுறவு பாற்பொருள்
உற்பத்தி விற்பனவுச் சங்கம்.
கிளிநொச்சி.

06 04 1990 (சி-4287)

---

# அரச பண்டகசாலையில் கள்ளச் சாராய உற்பத்தி!

கொழும்பு, ஏப் 16

கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு எதிரே அமைந்துள்ள அரச பண்டகசாலை ஒன்றில் இயங்கிய சட்டவிரோத சாராய வடிசாலை ஒன்றை பொலீஸார் நேற்று முன்தினம் முற்றுகையிட்டனர்.

கள்ளச்சாராயம் அடைக்கப்பட்ட நிலையில் சுமார் 2 ஆயிரம் போத்தல்களும் அவற்றில் ஒட்டுவதற்கான பத்தாயிரம் 'லேபிள்' களும் பொலீஸாரால் அப்போது கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட கள்ளச் சாராயத்தின் பெறுமதி சுமார் 7 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மதுவகைகளைக் கள்ளத்தனமாக போத்தல்களில் அடைத்து விற்று வந்த இந்த வடிசாலை, அரச பண்டகசாலையில் நீண்டகாலமாக இயங்கி வந்தது என்று தெரிகிறது.

(உ-எ)

---

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**P. ஜெயசோதி**
(காரைநகர் பொன்னம்பலம் வீதியைச் சேர்ந்தவர்)

பிறப்பு: 1938 - 09 - 29    இறப்பு: 1986 – 04 – 15

**திதி: 15. 04. 1990 ல் நடைபெற்றது.**

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் துயரால் வாடும்:
அன்பு மனைவி: பரமேஸ்வரி,
அருமை பிள்ளைகள்: பவானி, ஜெயவன்.
(12920)

---

# கேள்வி அறிவித்தல்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**பின்வரும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன:**

| வேலைகள் விபரம் | ஆகக் குறைந்த அளவு நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் | பதிவுத் தொகை நீர்ப்பாசனத் திணைக் களத்தில் | மீளளிக்கப் படக் கூடிய கட்டுப் பணம் | மீளளிக் சப்படாத கட்டுப் பணம் |
|---|---|---|---|---|
| 1. (அ) தண்ணிமுறிப்புக்குள அணைக்கட்டுப் புனருத்தாரணமும் கல்லணையிட்டுப் பாதுகாத்தலும் | 1,400,000/- | 500,000/- | 250/- | 50/- |
| (ஆ) மேற்படி | 950,000/- | 350,000/- | 250/- | 50/- |
| 2. தண்ணிமுறிப்புக்குள இடது கரை பிரதான வாய்க்கால், கிளை வாய்க்கால் வீதிகளுக்கு கிரவல் போடுதல். | 700,000/- | 250,000/- | 250/- | 50/- |
| 3. தண்ணி முறிப்புக்குள அவசரத் திருத்த வேலைகள் | 550,000/- | 200,000/- | 250/- | 50/- |
| 4. முத்தையன்கட்டு இடது கரைக் கிளை வாய்க்கால் 'டி' வாய்க்கால் வீதிகள் திருத்துதல் | 500,000/- | 175,000/- | 250/- | 50/- |
| 5. முத்தையன்கட்டு குள வலது கரைக் கண்டங்களிலுள்ள வாய்க்கால் கொன்கிறீற் அமைப்புகள் திருத்த வேலை | 2,000,000/- | 650,000/- | 250/- | 50/- |
| 6. (அ) விசுவமடுக்குள அணைக்கட்டுப் புனருத்தாரணமும் கல்லணையிட்டுப் பாதுகாத்தலும் | 1,000,000/- | 350,000/- | 250/- | 50/- |
| (ஆ) மேற்படி | 1,600,000/- | 400,000/- | 250/- | 50/- |
| 7. (அ) முத்தையன் கட்டுக்குள வலது கரை கிளை வாய்க்கால் 'டி' வாய்க்கால் வீதித் திருத்த வேலைகள் | 350,000/- | 150,000/- | 250/- | 50/- |
| (ஆ) மேற்படி | 1,000,000/- | 350 000/- | 250/- | 50/- |
| 8. தண்ணி முறிப்புக் குளக் கலிங்கு வெள்ள அழிவுத் திருத்த வேலை | 450,000/- | 150,000/- | 250/- | 50/- |
| 9. முத்தையன் கட்டுக்குள இடதுகரை பிரதான வாய்க்கால் கதவுகளை மாற்றுதல் | 250,000/- | 50,000/- | 250/ | 50/- |
| 10. (அ) உடையார்கட்டு 'டி' வாய்க்கால் வயல் வாய்க்கால் வீதிகள் திருத்துதல் | 250,000/- | 100,000/- | 250/- | 50/- |
| (ஆ) மேற்படி | 250,000/- | 100,000/- | 250/- | 50/- |
| (இ) மேற்படி | 300,000/- | 100,000/- | 250/- | 50/- |
| (ஈ) மேற்படி | 250,000/- | 50,000/- | 250/- | 50/- |
| 11. உடையார்கட்டுப் பிரதான வாய்க்கால் வீதியிலுள்ள கலிங்கு-தாம்போதி திருத்த வேலை | 250,000/- | 100,000/- | 250/- | 50/- |
| 12 மன்னா கண்டலிலுள்ள முத்தையன் கட்டுக்குள பராமரிப்பு மேற்பார்வையாளர், தொழிலாளர் வதிவிடங்கள் திருத்துதல் | 250,000/- | 50,000/- | 250/- | 50/- |
| 13. கணுக்கேணியிலுள்ள பராமரிப்பு மேற்பார்வையாளர் விடுதி திருத்துதல் | 250,000/- | 50,000/- | 250/- | 50/- |

நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்திலும் (ஐ சி ரீ ஏ டி) நீர்ப்பாசனத் திணைக்களத்திலும் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர் மாத்திரம் 11-05-1990ஆம் திகதி முற்பகல் 10 00 மணிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம். கேள்விப் பத்திரங்களை 1 தொடக்கம் 8 வரையான வேலைகளுக்குக் கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்தும் 9 தொடக்கம் 13 வரையான வேலைகளுக்கு முத்தையன்கட்டுப் பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரிடமிருந்து 11-04-1990 தொடக்கம் 07-05-1990 ஆம் திகதி வரை வேலை நாட்களில் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

ஒட்டுசுட்டான்,
05-04-1990

**எந்திரி பொ. சேனாதிராசா,**
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
முத்தையன்கட்டுப் பிரிவு. [சி-4452]

---

உடனடி

# வேலை வாய்ப்பு

**Saudi Arabia - Kuwait**
**Bahrain - Singapore - Abudhabi**

**House Maids, Drivers, Labourers, Tailors**

- ★ முஸ்லிம் பணிப் பெண்களுக்கு பிரயாணச் சீட்டு இலவசம்.
- ★ Labourers - கூலி ஆட்கள் குவைத்திற்கு கூடுதலாகத் தேவை.
- ★ ட்றைவர்ஸ் - ரெயிலேர்ஸ் எல்லா நாடுகளுக்கும் தேவை.
- ★ பாஹ்ரெய்ன் - Civil Engineer - Quantity Surveyor - Spare - Parts Salesman தேவை.
- ★ Pass Port கடவைச் சீட்டு இல்லாதவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு சபையினர் மூலம் ஒரு கிழமையில் எடுக்க ஒழுங்கு செய்து தரப்படும்

தொடர்பு கொள்ளவும்:

**A. K. சிவஞானம்**
171 A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தலைமைக்காரியாலயம்:
L. Licence No: 585
265/15, காலி வீதி, கொழும்பு – 3
[12915]

---

# ஆங்கிலம் பேசுவது எப்படி?

★ Spoken English Classes
★ Basic English Classes
(ஆங்கில இலக்கணத்துடன் கூடிய வகுப்புகள்)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்: 21–04–90 சனிக்கிழமை**

நாவலர் கல்வி நிலையம் (சித்தங்கேணி) — காலை 9.00 மணி

சண் கல்வி நிலையம் (சண்டிலிப்பாய் சந்தி) — காலை 10.00 மணி

BOND கல்வி நிறுவனம் (ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) — காலை 11.30 மணி

வள்ளுவன் இங்கிலீஸ் அக்கடமி (வழக்கம்பரை சுழிபுரம்) — மாலை 4.00 மணி

**ஆசிரியர்: A. V. மகாதேவன்**

(ரூபவாஹினி, வானொலி ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஆங்கிலச் செய்திகளும், ஆங்கிலப் புதினப் பத்திரிகைகளின் செய்திகளும், போதனையின் ஒரு அம்சமாகின்றன) [3144]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



**செல்வி க. புஷ்பரஞ்சினி (நித்தியா)**

அன்னை மடியில்: 28 – 05 – 1975    ஆண்டவன் மடியில்: 26 – 04 – 1989

நித்தியே நீ எங்கெங்கு சென்ற போதும்
எங்கள் நெஞ்சம் உன்னைச் சுற்றியே தேடும்
பூர்த்துக் காய்க்க வேண்டிய வேளையில்
புனித யாத்திரை சென்று விட்டாய்
காத்திருக்க எம்மைக் கலங்க விட்டாய்

இதைத் திருவள்ளுவர்
''குடம்பை தனித்தொழிய புட் பறந்தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு'' என்று கூறினார்

உன் ஆத்மா சாந்தியடைய எல்லோரும் இறைவனை வேண்டுகிறோம்.

**பெற்றோர்,**
**சகோதர, சகோதரிகள், மைத்துனர்மார்,**
**பெறா மகள்**

ப. கணபதிப்பிள்ளை (கணேஸ்)
காளி கோவிலடி,
தாவடி வடக்கு.
கொக்குவில். [12925]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில்
# வெளிநாட்டு ராணுவ செயற்பாடு எப்படி இருக்கும்?

## இலங்கையில் இந்திய ராணுவ நடவடிக்கை
### சிறந்த உதாரணம் என்கிறார் அமெரிக்க பேராசிரியர்

கொழும்பு எப் 16
உள்ளூர் மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் வெளிநாட்டு நிறுவனத்தின் செயற்பாடு எப்படி இருக்கும் என்பதை இலங்கையில் இந்திய இராணுவ நடவடிக்கை எடுத்துக் காட்டியது.

அமெரிக்க இல்லி நொய்ஸ் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் ஸ்டீபன் கொஹென் மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் ஸ்டீபன் கொஹென் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

தென் ஆசிய நாடுகளின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விஷயங்களில் நிபுணரான இவர் இரண்டு புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

ஒன்று இந்திய இராணுவத்தைப் பற்றியது. மற்றது பாகிஸ்தான் இராணுவத்தை பற்றியது.

இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இவர் இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கும் விஜயம் செய்தார்.

9185–1987 காலத்தில் இவர் அமெரிக்க ராஜாங்க அமைச்சில் தென் ஆசிய கொள்கை வகுக்கும் பிரிவில் ஓர் உறுப்பினராகப் பணியாற்றினார்.

இவர் கொழும்பில் இருந்து வெளிவரும் 'சண்டே ஐலண்ட்' வார இதழுக்கு அளித்த பேட்டியின் முக்கிய பகுதிகள் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

கேள்வி: இந்திய இராணுவம் பாகிஸ்தான் இராணுவம் பற்றி இரண்டு நூல்களை எழுதியிருக்கிறீர்கள்.

இலங்கையில் இடம் பெற்ற இந்திய இராணுவ நடவடிக்கை பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: இந்தியாவின் வியட்னாமாக இலங்கை இருந்தது.

ஆப்கனில் சோவியத் படித்தது போன்று, வெளிநாட்டில் எதிர்ப்பான சூழ்நிலையில் தங்களது இராணுவ வல்லமையின் வரையறையை இலங்கை நடவடிக்கை மூலம் இந்தியா அறிந்து கொண்டது

இந்திய இராணுவம் புலனாய்வுத்துறையில பின்தங்கி இருந்தது என்று ஜெனரல் கல்கத் கூறியதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

வியட்னாமில் அமெரிக்கர்கள் நிலையும் ஆப்கனில் சோவியத் நிலையும் இப்படித்தான் இருந்தது.

உள்ளூர் மக்களின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் வெளிநாட்டு இராணுவத்தின் செயற்பாடு எப்படி இருக்கும் என்பதை இலங்கையில் இந்திய இராணுவ நடவடிக்கை எடுத்துக் காட்டியது.

கேள்வி: இந்திய இராணுவம் இலங்கையில் பெற்ற அனுபவம் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.

பதில்; நல்லது. இந்தியா படித்துக் கொண்ட பாடம் பற்றி எனக்கு எதுவும்தெரியாது. இதுபற்றி இந்தியர்களைத்தான் கேட்க வேண்டும். ஆனால் இது நீண்ட காலமாக என் மனத்தில் இருந்து வந்த ஒன்றை உறுதிப்படுத்தியது.

தெற்கு ஆசியாவில் உள்ள இனரீதியான குழுவினர் எவரையும் சிறந்த போராளிகளாக மாற்ற முடியும் என்பதே அதுவாகும்.

இலட்சிய வெறிகொண்ட, தங்களையே அர்ப்பணிக்கும் எவரும் மிகச்சிறந்த போராளிகளாக மிளிர்வர்.

விடுதலைப்புலிகளும் வேறு சில தமிழ்க் குழுக்களும் மிகச்சிறந்த முறையில் போராட்டம் நடத்தியுள்ளனர்.

இராணுவ சரித்திர வியலாளன் என்ற முறையில் நான் கூறுவது, எந்தக் குழுவையும் இராணுவத்துக்குரிய குழு அல்ல என்று ஒதுக்க முடியாது. என்பதே ஆகும்.

விடுதலைப் புலிகள் போராளிகள் மிகச் சிறந்த இராணுவ வல்லமை கொண்டவர்கள். அவர்கள் இந்திய இராணுவத்தையே ஸ்தம்பிக்கச் செய்யும் அளவுக்கு யுத்தம் நடத்தியுள்ளனர் (இ-எ)

### பஸ்களில் திருக்குறள்

யாழ்ப்பாணம், எப். 16
வடபிராந்தியத்தில் உள்ள போக்குவரத்துச்சபை பஸ்களில் 'திருக்குறள்' பொறிக்கப்படும்.

மாணவர்களுக்கு உதவும் வகையில் தகரத்தில் திருக்குறள் எழுதப்பட்டு பஸ்களில் பொருத்தப்படவிருக்கிறது.

மில்க்வைற் நிறுவன உரிமையாளர் திரு. க. கனகராசா இந்த உதவியை வழங்க இருப்பதாக போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினம் தெரிவித்தார். (இ-3)

### நினைவில் இன்று

16 – 4 – 1990

- சேர்பொன், இராமநாதன் ஜனன தினம்
- டென்மார்க் தேசிய தினம்.

## மேலும் 1,700 கிராமங்களுக்கு இவ்வாண்டு மின் இணைப்பு

கொழும்பு, ஏப் 16
இந்த ஆண்டில் மேலும் 1,700 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சக்தி அமைச்சர் சந்திரா பண்டாரா தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி இதற்குப் பெறப்படும் என்றும் அமைச்சர் அறிவித்தார். [உ-எ]

## ஒஸ்மானியாக் கல்லூரியில் மீண்டும் ஆரம்பப் பிரிவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16
யாழ் ஒஸ்மானியாக்கல்லூரி ஆண்டு 1 தொடக்கம்ஆண்டு 13 வரை வகுப்புக்களைக் கொண்ட உயர்நிலைக்கல்லூரியாக இயங்கும். இதற்கான அனுமதியை வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் திரு. ஈ. ஜே.சற்குணராஜா பிரஸ்தாப கல்லூரிக்கு விஜயம் செய்த போது நேரடியாக வழங்கினார்.

ஒஸ்மானியக் கல்லூரிப் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பழைய மாணவர் சங்கம் ஆகியன கல்விச் செயலாளருக்கு இராப் போசன விருந்தளித்து கௌரவித்தனர்.

வட பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், மட்டக்களப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. சோமசுந்தரம், தொழில்நுட்பக்கல்விஅதிகாரி திரு. எஸ்.சுப்பிரமணியம்ஆகியோரும் இவ்விருந்து உபசாரத்தில் கலந்து கொண்டனர் அப்போதே இந்த உறுதி மொழி வழங்கப்பட்டது.

பெற்றோரின் எதிர்ப்பின் மத்தியில் இக்கல்லூரியின் ஆரம்பப் பிரிவை மூடும்படியான உத்தரவுபிறப்பிக்கப் பட்டதும் பெற்றோர், பழைய மாணவர்கள், அபிமானிகள் ஆகியோரின் விருப்பத்திற்கேற்ப தமிழீழவிடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் தற்காலிக அனுமதி வழங்கியதும் குறிப்பிடத் தக்கது.

ஒஸ்மானியாக்கல்லூரியில் ஆரம்பபிரிவு தொடர்ந்து இயங்குவதற்கான அனுமதி கிடைத்ததையிட்டு யாழ் முஸ்லிம்பகுதிமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அவர்கள் தங்கள் நன்றியையும், பாராட்டையும் கல்விச்செயலாளருக்கும், கல்விப்பணிப் பணிப்பாளருக்கும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு ஒஸ்மானியாக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க நடவடிக்கைக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (இ)

### நினைவுச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கலாநிதி. கு. சிவப்பிரகாசம் நினைவுப் பேருரை இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் தொல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறும்.

மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் ''உவமவியலின் உளவியல் அடிப்படை'' என்னும் பொருளில் பண்டிதர். க. சச்சிதானந்தன் பேருரை நிகழ்த்துவார். (க-7)

### கிளிநொச்சி பயிற்சிநெறி ஒத்திவைப்பு

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியருக்கான பயிற்சிநெறி மே மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகும்.

இப்பயிற்சி நெறி இம் மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

தவிர்க்கமுடியாத காரணங்களால் இது அடுத்தமாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக கிளிநொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். கே. வேலாயுதம் அறிவித்துள்ளார். (இ-69)

### சமய நிகழ்வுகளில்

#### கந்தசாமி கோயில்

யாழ்ப்பாணம். ஏப்ரல்- 16
நீர்வேலி கந்தசாமி தேவஸ்தான மஹோற்சவம் இம் மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

மே மாதம் 8 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 9 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

#### தீக்குளிப்பு

ஈழத்து இராமேஸ்வரம் - புங்குடுதிவு பாணாவிடை சிவன் தேவஸ்தானத்தில் 17 ஆம் திகதி ஆறாம் திருவிழா தினத்தன்று புங்குடுதிவு இளந்தமிழ் மன்றம், வாரதிவு சனசமூக நிலையம் ஆகியவற்றின் ஆதரவுடன் இரவு விசேட நிகழ்ச்சியாக தீக்குளிப்பு வைபவம் நடைபெறும். (க)

---

### பொய்யாமொழி

**குறள்:**
உறுதோறு உயிர்தளிர்ப்பத் திண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்.

**பொருள்:**
பொருந்து போதெல்லாம் உயிர் தளிர்க்கும் படியாகத் திண்டுதலால் இவளுக்குத் தோள்கள் அமிழ்தத்தால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
16 - 04 - 1990 த. பெ இலக்கம் 25

## இந்த அவசரம் தேவையா?

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பொலீஸ் நிலையங்களில் கடமையாற்றிய சிங்களப் பொலீஸ்காரர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சியில் பணிபுரிந்த சிங்களப் பொலீஸ் உத்தியோகஸ்தர்களிலும் கணிசமான எண்ணிக்கையினர் தென்னிலங்கைக்கு இடம்மாற்றப்பட்டுள்ளனர். இதே வரிசையில் யாழ்ப்பாணம் கோட்டை, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இடங்களில் இருந்தும் சிங்களப் பொலீசார் தென்னிலங்கைக்கு மாற்றம் செய்யப்படுவர் என்பது நம்பிக்கையான தகவல்.

மேலே குறிப்பிட்ட பொலீஸ் நிலையங்கள், இந்தியப் படை வடக்கு-கிழக்கில் நிலை கொண்டிருந்த வேளையிலும் இருந்தவை; ஆனால் இயங்காதவை. பொலீஸ்காரர்கள் அப்போது நிலையங்களுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தார்கள்.

இந்தியப் படை கடந்த மாதம் மூன்றாம் வாரத்தில் முற்றாக விலகியதும், இந்தப் பொலீஸ் நிலையங்கள் சிறிய அளவில் இயங்கத் தொடங்கியவை. ஆனால் ஒரு மாத காலத்திற்குள், பருத்தித்துறையிலும், திருகோணமலையிலும் பொலீசார் தமது பழைய சேஷ்டைகளையும், ''அடாவடித்தனங்களையும்'' ஆரம்பித்தது பெரும் துரதிர்ஷ்டவசமானதாகும்.

இந்திய இராணுவத்தின் பிடிக்குள் 32 மாதங்களாகச் சிக்கி இருந்த வடக்கு-கிழக்கில், இலங்கை அரசின் ஆட்சி நிர்வாகம் முற்றாகத் தேய்ந்து போயிருந்தது. அதற்கு முன்னரும், பல வருட காலமாகத் தமிழ்ப் பிரதேசங்களில் கொழும்பு அரசு செயலற்று நைந்து போயிருந்தது.

அதன் காரணமாகத் தனது ஆட்சி — ஆதிக்கத்தை தமிழ்ப் பகுதிகளில் உடனடியாக மீளவும் ஊன்றிக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் நினைத்திருக்க வேண்டும். இலங்கை முழுவதிலும் கொழும்பு அரசின் அதிகாரம் — ஆட்சி தான் நடக்கிறது என்பதைக் காட்டிக் கொள்ள வேண்டும் என்று அது ஆசைப்பட்டிருக்கிறது.

அந்த ஆசையே வேண்டாத அவசரத்தைத் தோற்றுவித்தது. அதாவது வடக்கு-கிழக்கில் பொலீஸ், மற்றும் ஆயுதப்படைகளை செயற்பட அரசு அவசரம் காட்டியது. இந்த அவசரத்தை — ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற உள் எண்ணத்தை, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல் என்ற போர்வைக்குள் அது மறைத்துக் கொண்டிருக்கிறது!

இந்தியப் படையை இங்கிருந்து வெளியேற்றுவதற்கு, கொழும்பு அரசாங்கத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்கினார்கள் என்பது ஒன்று. இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் அரசும் — விடுதலைப் புலிகளும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதன் விளைவாக போர் நிலையில்லாத அமைதியான, சுமுகமான சூழ்நிலை தோன்றியிருக்கிறது என்பது இரண்டாவது.

இந்தச் சூழ்நிலையில் கொழும்பு அரசு தமிழ்ப் பகுதிகளில் தனது ஆதிக்கத்தை மீளப் பதித்துவிட வேண்டும் என்பதில் தேவையில்லா அவசரம் காட்டுவது ஏன்?

தென்னிலங்கையைச் சேர்ந்த பொலீசாரும், ஆயுதப் படையினரும் அரசின் இப்போதைய போக்கைப் புரிந்து கொண்டு, சூழ்நிலையைக் கெடுக்காமல் சமயோசிதமாக நடப்பார்கள் என்பதில் எவருக்கும் நம்பிக்கை இருக்க முடியாது.

தமது மக்களைப் போலல்லாது, தமிழர்களை வேறானவர்களாகப் பார்க்கும் மனப்போக்கு அவர்களிடமிருந்து மறைந்து விட்டது என்பதை அரசு நிச்சயித்துக் கொண்டு விட்டதா? அப்படிக் கண்டுபிடித்திருந்தால், கடந்த வாரத்தில் பருத்தித்துறை, திருகோணமலைச் சம்பவங்கள் நடைபெற்றிருக்காவே!

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்குமுன்னர், அவர்கள் மீது ஆதிக்கமும் அதிகாரமும் செலுத்த வேண்டும் என்று கொழும்பு அரசு நினைப்பது தவறு. அது இப்போது உருவாகி வரும் நல்ல அரசியல் சூழ்நிலையைக் கெடுக்கும். வெண்ணெய் உருகி வரும் போது தாழியைத் தட்டி உடைத்துப் பிளப்பது போலாகும்.

இது ஒரு புறமிருக்க, தமிழர் பிரதேசங்களில் தமிழர்களின் அதிகாரமும், நிர்வாகமும், ஆதிக்கமும் இருக்கக் கூடாது என்று அரசு இப்போதும் நினைக்கிறது? அவசரக் குடுக்கைத் தனம் அதனையே எடுத்தியம்புகிறது என்று அர்த்தம் கொண்டால் தப்பு என்ன?

இன்னொன்றையும் இங்கு குறிப்பிட வேண்டிய அவசியம் உண்டு. தமிழ் மக்கள் தங்களது பாதுகாப்புக்குத் தாமே பொறுப்பாக இருக்க வேண்டும் என்றே விரும்புகிறார்கள். எந்த இரண்டாமவர் கையிலும் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க அவர்கள் தயாரில்லை. இதையும் கொழும்பு அரசு நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

பாதுகாப்பு விடயத்தில் கொழும்பு அரசு தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட அவசரப்படுவது, அவ்வளவு நல்ல விளைவுகளைத் தரும் என்று சொல்வதற்கில்லை. பதிலாக வேண்டாத முறுகல் நிலையை உண்டாக்கி, இப்போதைய அமைதியைக் குலைத்துவிடும்.

ஆத்திரகாரனுக்குப் புத்தி மத்திமம் என்றால் அவசரகாரனுக்கு அது மழுங்கியே போய்விடலாம்!

### நயினாதீவு
## மணிபல்லவகலாமன்றத்தின் 28ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம் ஏப் 16
நயினாதீவு மணிபல்லவகலாமன்றத்தின் 28 ஆவது ஆண்டு விழாவை ஒட்டி இன்று 16 ஆம் திகதி திங்கட்கிழமையும் நாளை 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

16 ஆம் திகதி காலை 10.30 க்கு ஆரம்பமாகும்.

[5ம் பக்கம் பார்க்க]

## இனவிடுதலைக்கு தேசப்பற்றுள்ள
## தொழிலாளர் - மாணவர்கள் பங்களிப்புத்தேவை
### தேசியபோக்குவரத்துத் தினவிழாவில் ஆஞ்சநேயர்உரை

யாழ்ப்பாணம் ஏப் 16
''போக்குவரத்துச்சபை ஊழியர்களையும், சிறந்த மாணவர்களையும் கௌரவிப்பது ஒரு சாதாரண விஷயம் அல்ல. இனவிடுதலைக்கு தேசபக்தி உள்ள தொழிலாளர் சமூகமும், மாணவர் சமூகமும் தம்பங்களிப்பை வழங்க ஊக்குவிப்பதாகவே இது அமைகிறது''

இப்படிக்கூறினார் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி வலிகாமம் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஷப்றா-உதயன் நிறுவனங்களின் ஆதரவுடன் நடத்திய தேசிய போக்குவரத்து தினவிழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சபைத்தலைவர் திரு. சி. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

ஈழமண்ணில் பாதுகாப்பு, நிர்வாகம் சீராகவும், சரியாகவும் இல்லாத காலகட்டத்தில் அத்துறைகளில் மக்கள் தமது பங்களிப்பை நல்ல முறையில் செலுத்தியிருந்தார்கள். தொழிலாளர்களும் தம் கடமை[illegible] விடுதலைக்குத் தம் பங்களிப்பை [illegible]

இனவிடுதலைப் போரட்டம் தொடரும் இந்தகாலகட்டத்தில் போராளிகளின் பங்களிப்பு மட்டும் இருந்தால் போதாது. சகலதரப்பினரும் எந்த வகையில் தம் பங்களிப்பை செலுத்த முடியுமோ அந்தப்பங்களிப்பை வழங்கி போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியதவசியம்.

#### மாணவர் கல்வி

சமுதாயச் சீரழிவுகள் எவ்வளவோ இடம் பெற்ற போதும் எம் மாணவர்கள் கல்வியில் நாட்டம் காட்டி வந்துள்ளனர். இந் நிலை தொடர இந்த கௌரவிப்பு உந்து சக்தியாக அமையும்.

அரசாங்க நிறுவனத்துக்கு தனியார் நிறுவனம் ஒன்று இந்த விழாவுக்கு உதவி வழங்கியுள்ளது பாராட்டப்பட வேண்டியது. இதே போன்று மற்ற அரசாங்க, கூட்டுத்தாபன நிறுவனங்களுக்கும் தனியார் நிறுவனங்கள் ஆதரவு கொடுத்து இணைப்பு உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது. இதன் மூலம் சமூக, பொருளாதார விருத்திகளை காண முடியும்.

இப்படி அவர் கூறினார்:

போக்குவரத்துச் சபைத் [illegible] தலைமையுரையில் கூறியதாவது:

10 ஆண்டு காலமாக இங்கு அமைதியற்ற நிலை நிலவி வந்தது. இதனால் மக்களுடன் பொதுஜன உறவை வளர்க்கும் இது போன்ற விழாக்களை நடத்தமுடியாது போயிற்று.

#### ஊழியர் சேவை

எமது ஊழியர்கள் தம் உயிரை துச்சமென மதித்து மக்களுக்காகச் சேவையாற்றினார்கள். அவர்களை இன்று கௌரவிப்பதன் மூலம் மற்ற ஊழியர்களை ஊக்குவிப்பதாக அமையும்.

அழிக்க முடியாத சொத்தாக விளங்கும் கல்வியில் நாம் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது அவசியம். அதனால் மாணவர்களை ஊக்குவிக்க இவர்களுக்கு இந்த கௌரவிப்பை வழங்குகிறோம். இதற்கு ஷப்றா-உதயன் நிறுவனங்கள் உதவியமை பாராட்டுக்குரியது என்றார்.

அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பேசுகையில் கூறியதாவது:

மாணவர் கல்விக்கும் போக்குவரத்துச் சபைக்கும் என்ன தொடர்பு என்ற கேள்வி எழுகின்றது. போக்குவரத்துமுன்யோசனை, கட்டுப்பாடு, கடமை உணர்வு அடிப்படையிலேயே நடாத்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

### வாசகர் திருமுகம்

#### போக்குவரத்து நெருக்கடி

பல்வேறு காரணங்களால் திருகோணமலைக்குப் போவோர் திருகோணமலையிலிருந்துவெளியேசெல்வோர் ஆகியோரின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

ஆனால் இதற்கு ஏற்றாற் போல்போக்குவரத்துச்சேவை அமையவில்லை.

நாள் ஒன்றுக்கு யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கு தலா ஒரு சேவை நடைபெறுகின்றது. குறைந்தபட்சம் 75 பயணிகள் ஒரு பஸ்சில் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது.

ஆசனப் பதிவு பிரயாணத்தின் முதல் நாள் மட்டுமே செய்யலாம். அதற்கும் அதிஷ்டம் வேண்டும். அதிகாலையில்வந்து தூங்கிவரிசையில் நிற்க வேண்டும். வரிசைக்கு ஒரு குறிப்பிட்ட இடமும் இல்லை. இப்படிப் பிரயத்தனம் செய்து ஆசனம் பெறுவோர் 30 பேர் மட்டுமே. மற்றவர்கள் வயோதிபர். என்றாலும்சரி, கைக்குழந்தைக்காரர் என்றாலும் சரி, கால் வைத்து நிற்க இடம் கிடைத்தால் அதிலேயே வேரூன்ற வேண்டியதுதான்!

இந்தப் போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்க யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் இரவு ரயிலில் ஒன்றோ இரண்டோ பெட்டிகளைப் பொருத்தி கிழக்கே செல்லும் ரயிலுடன் மாகோவில் இணைக்க ஏற்பாடு செய்யலாம். இவற்றில் ஒரு பெட்டியை மட்டக்களப்பிற்கும் மற்றதைத் திருகோணமலைக்குமாக ஒழுங்கு செய்யலாம். வடக்குக் கிழக்குப் போக்குவரத்துச் சபையினர் மதியத்திலும் ஒரு சேவையை ஏற்படுத்தலாம்.

எஸ். ஏகாம்பரம்,
திருகோணமலை.

#### சித்த வைத்தியம்

உதயன்பத்திரிகை 9-4-90 ல் வெளிவந்த '' பீனிசநோய்க்கு ஆயுள்வேதமருந்து ஆராய்ச்சி நடக்கவுள்ளது'' என்பதனைப் பார்த்தேன்.

அதில் சித்த ஆயுள்வேத மருந்தின் ஆராய்ச்சியா? ஆயுள்வேத மருந்தின் ஆராய்ச்சியா? என்பதை விளங்க பிரசுரிக்க வேண்டும்.

தெய்வீக ஞானத்தால் பதினெண்சித்தர்களும்ஆராய்ந்து செந்தூரம்,பஸ்பம், சூரணம், மாத்திரை, தைலவகைகளைப் பிரசுரம் செய்து தந்திருக்கிறார்கள். அவற்றுள் ஒவ்வொரு வைத்திய குடும்பத்தவரும் ஒவ்வொரு மருந்து முறைகளைக் கையாண்டு வருகிறார்கள்.

அதனை ஆராய்ச்சி செய்ய விரும்புபவர்கள் முதலில்சித்த வைத்தியர் கூட்டுறவு வைத்தியசாலை ஒன்றினை ஆரம்பித்து நடாத்த துணிந்த பின்னர்தான் பீனிசத்துக்கு மருந்தைக் கண்டறியலாம்.

கு. சங்கரப்பிள்ளை,
சித்தவைத்தியசாலை,
சுளிபுரம்.

## நாவினால் நரகம் போவதா?




''யாரேனும் ஒருவன் பிறரை ஒரு பாவயான காரியத்தை குறித்து பழி சுமத்துவானானால், அவன் மரணம் அடைவதற்கு முன்பதாக, அதே பாவத்தில் மூழ்கி மடிவான்'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்-

ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், தங்கள் நாவைப் பிடித்துக் கொண்டு, உன்னுடைய தகாத சொல்லின் காரணமாகத்தான் நாங்கள் அழிவில் விழுந்து விடுகிறோம் என்று கூறுவார்கள்.

ஹஜ்ரத் இப்னுல் முன் கதிர் (ரலி) அவர்கள் தமது மரண சமயத்தில் அழ ஆரம்பித்தார்கள். என்ன காரணம் என்று கேட்க நான் செய்த காரியங்களில் எது பாவமானது? என்று எனக்குத் தெரியாத காரணத்தால் அழுகிறேன். சாதாரணமாக என்று நான் பேசிய எந்த வார்த்தையாவது, அல்லாஹ்விடத்தில் கடுமையும் குற்றமும் உடையதாகி விடுமோ என்று தெரியாத காரணத்தால் அழுகிறேன் எனக் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நேபாளம் கண்டனம்

காத்மண்டு, ஏப்ரல் 15
காஷ்மீரில் அப்பாவிமக்கள் படுகொலை செய்யப்படுவதை நேபாளத்தில் இருந்து வெளிவரும் அரசசார்பு பத்திரிகை கண்டித்து உள்ளது. (எ)

## பாகிஸ்தான் நிராகரிப்பு!

காஷ்மீர் எல்லைப் புறத்துக்கு பாகிஸ்தான் தனது இராணுவத் துருப்புக்களைப் பெருமளவில் அனுப்பி வைத்திருப்பதாக இந்தியப் பிரதமர் வி. பி. சிங் தெரிவித்த குற்றச்சாட்டை இஸ்லாமபாத் அரசு நிராகரித்துவிட்டது.

யுத்த நடவடிக்கையில் பாகிஸ்தான் ஈடுபடுவதாக பிரதமர் சிங் கூறியிருப்பது வெறும் கற்பனை என்றும் இஸ்லாமபாத் அரசு தெரிவித்துள்ளது. [உ-எ]


# BOND
## INSTITUTES, JAFFNA
# O/L
DECEMBER, 1990, 91...

முறையான, பாடத்திட்டத்திற்கேற்ற விரிவுரைகள்.

இலவச கற்கைப்பொதிகள் [STUDY PACKS]

### O/L பகல் வகுப்புகள் (Day Class)

காலை, மாலை வகுப்புகள்

★ TYPING ★ SHORTHAND

★ SPOKEN ENGLISH

10 - 04 - 1990 இல் ஆரம்பமாகிவிட்டது: (-சி4263)


★ சுதந்திரப் பிரகடனம் ரத்துச்செய்யப்படாவிட்டால்

# லித்துஏனியா மீது பொருளாதார முற்றுகை விதிக்கப்போவதாக கிரெம்ளின் அறிவிப்பு!

### திங்கள் வரை காலக்கெடு

மாஸ்கோ, ஏப் 15
ஒருதலைப்பட்ச சுதந்திர பிரகடனத்தை ரத்துச்செய்ய லித்துஏனிய அரசுக்கு சோவியத் மத்திய அரசு இன்று திங்கட்கிழமை வரை காலக்கெடு விதித்துள்ளது.

லித்து ஏனிய அரசு இதற்கு இணங்க மறுக்கும் பட்சத்தில் அதன் மீது பூரணப்பொருளாதாரத்தடைஒன்றை விதிக்கப் போவதாக சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்-பச்சேவ் பயமுறுத்தி உள்ளார்.

இதேவேளை-சோவியத்அரசின்பயமுறுத்தலுக்குப் பணியமுடியாது என்று லித்துஏனிய ஜனாதிபதி லாண்ட்ஸ்பேர்-கிஸ் தெரிவுத்துள்ளார்.

பொருளாதாரமுற்றுகை'க்கு தாக்குப் பிடிக்கக்கூடிய நடவடிக்கைகளை லித்து ஏனியா எடுக்கும் என்றும் திரு. பேர்-கிஸ் அறிவித்தார்.

எரிபொருள், மின் சக்தி ஆகியவற்றின் விநியோகம் ஆகியன லித்துஏனியாவுக்குக் கிடைக்காது முற்றாகத் துண்டிப்பதே கிரெம்ளின் அரசின் நோக்கம் என்றும் அறிவிக்கப்பட்டது.

தனியான கரன்ஸி நோட்டுக்களை அச்சடிக்க லித்து ஏனிய அரசு மேற்கு ஜேர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் உதவியை நாடியுள்ளது.

சோவியத் அரசின் பொருளாதாரமுற்றுகையைஇரண்டு மாதகாலம் தாக்குப்பிடிக்கும் நிலையில் லித்துஏனியா இருக்கிறது. அதற்கு இடையில் வேறு நாடுகளின் உதவிகளை பெறும் முயற்சியில் லித்து ஏனியா ஈடுபடும் என்றும் அறிவிக்கப்பட்டது. (எ)

## லித். மீது ராணுவ நடவடிக்கை அமெ.-ரஷ்ய உறவைப்பாதிக்கும்

### அதிபர் புஷ் எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப்ரல் 15
லித்து ஏனிய மாநிலம் மீது இராணுவத்தாக்குதல் ஏதும் நடத்தப்பட்டால் அது சோவியத் அமெரிக்க உறவை நிச்சயம் பாதிக்கும்.

இப்படி அமெரிக்க ஜனாதிபதி ஜொர்ஜ் புஷ் எச்சரிக்கை விடுத்தார்.

இதனிடையில்— லித்து ஏனிய மாநிலத்தை கிரெம்ளினின் நேரடி ஆட்சியின் கீழ் உடனடியாகக் கொண்டு வரப்போவதில்லை என்று சோவியத் ஜனாதிபதி மிக்செய்ல் கோர்பச்சேவ் தெரிவித்தார்.

சுதந்திரப் பிரகடனத்தை ரத்துச் செய்ய முடியாது என்றும் ஆனால் மாஸ்கோவுடன் பேச்சுக்கள் நடாத்த தயாராக இருப்பதாகவும் லித்து ஏனிய ஜனாதிபதி பேர்கிஸ் அறிவித்தார். (எ)


சகல உள்ளூராட்சி
எழுதுவினைஞர்களின் கவனத்திற்கு

### உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

21 - 04 - 1990

மேற்படி அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 21 – 04 – 1990 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9. 30 மணியளவில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெறும்.

இதற்கான அறிவித்தல் நிகழ்ச்சி நிரலுடன் அலுவலக ரீதியாக அனுப்பப்பட்டுள்ளது. எமது சேவைக்கு புதிதாகச் சேர்ந்தோரும், புதிதாக இடமாற்றம் செய்யப்பட்டோரதும் விலாசங்கள் கிடைக்காததால் கூட்ட அறிவித்தல்கள் சில அனுப்பமுடியாத நிலையும் ஏற்பட்டதையிட்டு மனம் வருந்துகின்றோம்.

சகலரும் இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கான இவ் அறிவித்தலை ஏற்று தவறாது சமுகமளித்து தங்களுடைய பூரண ஒத்துழைப்பை நல்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

20 – 04 – 1990, 21 – 04 – 1990 ஆம் திகதி தங்குவதற்கான இடவசதி நகரசபை, அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளது.

இங்ஙனம்:
ஞா. தங்கராசா,
நசரசபை அலுவலகம், அங்குரார்ப்பண குழுசார்பாக.
திருகோணமலை;
07 – 04 – 1990 (3304)



# BASF
## குமுலுஸ் D.F.


குமுலுஸ் D.F. போட்டி

பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி – | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி – | 5 |
| கைத்தெளி கருவி – | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி – | 20 |
| எவரெடி ரோச் லைற் – | 48 |
| ரீ சேட் – | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து, பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் "குமுலுஸ் DF போட்டி" என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேர்ஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.




வெட்டி அனுப்பவேண்டிய பகுதி




பெயர் ______

முகவரி ______

வியாபாரியின் பெயர் ______

முகவரி ______

FINCHEM AGRO DIVISION

பின்லே கெமிக்கள்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186. வக்சோல் வீதி, கொழும்பு 2.

Licence No S/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை. அவ[illegible]


### அன்னை திரேஸா

கல்கத்தா, ஏப்ரல்15
அன்னை திரேஸா, உலகதர்ம நிதி ஸ்தாபனத்தின் தலைவர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்துவிட்டார்.

இதனை பரிசுத்த பாப்பரசர் ஏற்றுள்ளார்.

இந்த ஸ்தாபனத்தின்கிளைகள் 90நாடுகளில் உள்ளன. சுமார் 400 ஆதரவற்றோர் இல்லங்களை இந்த ஸ்தாபனம் நடத்தி வருகின்றது. 80 வயதான அன்னை திரேஸா உடல்நலக் குறைவுகாரணமாக பதவி விலகினார்.

அவருக்கு கடந்த ஆண்டில் செயற்கை இருதயம் பொருத்தப்பட்டது. (எ)

### ரஷ்யா கோரிக்கை

மாஸ்கோ, ஏப்ரல்15
காஷ்மீர் விஷயத்தில் பொறுமையைக் கடைபிடிக்கும் படி சோவியத் யூனியனும் இந்திய, பாகிஸ்தான் அரசுகளைக் கேட்டுள்ளது. சிம்லா உடன்படிக்கையின் அடிப்படையில் தீர்வுகாணும் படி ரஷ்யா கோரியுள்ளது. (எ)

### புதுடில்லியில் தீ விபத்து

புதுடில்லி, ஏப்ரல்15
புதுடில்லியில் 36 மாடிகள் கொண்ட ஐந்து ஸ்டார் ஓட்டல் ஒன்றில் கடந்தவெள்ளிக்கிழமை ஏற்பட்ட தீவிபத்து பெரும் சேதத்தை உண்டு பண்ணியது.

அதிஷ்டவசமாக உயிரிழப்பை ஏற்படுத்தவில்லை. (எ)

### 'எய்ட்ஸ்' சுக்கு புதிய மருந்து

லண்டன், ஏப்ரல்15
எய்ட்ஸ்நோய்க்குசரியானமருந்து ஒன்றை நெதர்லாந்து பல்கலைக்கழக மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு கண்டுபிடித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இறுதிக்கட்டப் பரீட்சைக்குப்பின்னர் இம்மருந்து பற்றிய விவரங்கள் அமெரிக்க மருத்துவ சஞ்சிகையில் வெளியிடப்படும் என்று சொல்லப்படுகிறது. (எ)


French! French! French!

### பிரெஞ்சு மொழி வகுப்புகள்

For Beginners and Others

New Term Commences on
21 - 04 - 1990 Saturday 9.00 a.m


Information and Registration

### Alliance Francaise de Jaffna

(யாழ். பிரென்ஞ்சிய நட்புறவுச் சங்கம்)
130, 1st Cross Street, Jaffna.
[சி-4288]



### 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### யோசவ் இம்மானுவேல்

மலர்வு: 07 - 08 - 1908
உதிர்வு: 16 - 04 - 1988

அன்பே திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், எம்மை அன்போடும் பண்போடும், பாசத்தோடும், வழிநடத்திச் சென்ற எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

தகவல்:
E. A. துரைரெட்டினம், 145/8, கதீற்றல் லேன். யாழ்ப்பாணம்.
120/2, சலமன் லேன், கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.
[3197]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வடக்கு, கிழக்கு

# புனரமைப்புக்கு 2,500 கோடி ரூபா!

## அமெரிக்க உதவியாகக் கிடைக்கிறது

கொழும்பு ஏப்ரல் 16

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு என்று அமெரிக்க உதவியாக 60 கோடி டாலர் (சுமார் 2 ஆயிரத்து 500 கோடி ரூபா) கிடைத்திருக்கிறது.

இத்தகவலை புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர் நிர்மாணப் பணிகளைத் துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுச் செயலாளர் வடக்கு - கிழக்கு சமாதான கமிட்டி தலைவரும் நீதி அமைச்சருமான ஜனாப் சாகுல் ஹமீதுடன் பேச்சுக்கள் நடத்திவருகின்றார் என்றும் அமைச்சர் திரு. ஏ. எம். எஸ் அதிகாரி சொன்னார். (உ-எ)

### விண்ணப்பதாரர்களுக்கு

## கொழும்பிலிருந்து நேரடியாக பாஸ்போர்ட் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம், ஏப் 16

யாழ் செயலகத்தில் இன்று ஆரம்பிக்கப்படும் பாஸ்போர்ட் பிரிவில்பாஸ்போர்ட்டுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் செயற்பாடு மாத்திரமே நடைபெறும்.

விண்ணப்பித்தவர்களுக்கு பாஸ்போர்ட்டுகள் கொழும்பில் இருந்து நேரடியாகவே அனுப்பி வைக்கப்படும்.

யாழ் செயலக அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த காலத்தில் மூடப்பட்டிருந்த இந்தப் பிரிவு இன்று முதல் இயங்கும்.

விண்ணப்பதாரர்கள் தம் விண்ணப்பங்களை இந்தப் பிரிவில் கொடுத்தால் வங்கியில் பணம் செலுத்துவதற்கான படிவம் ஒன்று வழங்கப்படும்.

அந்தப் படிவத்தை இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் கொடுத்து உரிய பணத்தைச் செலுத்தி ரசீது பெறவேண்டும்.

பின்னர் மீண்டும் யாழ்செயலகத்தின் பாஸ்போர்ட் பிரிவுக்குவந்து, வங்கிரசீதைஅங்கு ஒப்படைத்தால் பாஸ்போர்ட் விண்ணப்பத்தை ஏற்றதற்கான அட்டை (''கார்ட்'') வழங்கப்படும் என செயலக அதிகாரி தெரிவித்தார்.

வாரத்துக்கு ஒரு தடவை விண்ணப்பங்கள் கொழும்புக்கு அனுப்பப்படும் என்றும்—

அங்கிருந்துநேரடியாக விண்ணப்புத்தோருக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (உ - 3)

### இனவிடுதலை....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தப்படுகின்றது. அதேபோன்று எமது மாணவர்களும் முன்யோசனை கட்டுப்பாடு, கடமை உணர்வு ஆகியவற்றுடன் கல்வி பயில வேண்டியதவசியமாகும் வருங்காலத்தை சிந்தித்து மாணவர்கள் செயல்பட வேண்டியது அவசியம் என்றார்,

விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட ஷப்றா நிறுவன யாழ். கிளை இயக்குநரும், உதயன் வெளியீட்டகத்தின் நிர்வாகஇயக்குநருமான திரு. ஈ. சரவணபவன், தொழிலாளர் சார்பில் திரு. எஸ். வேலாயுதம், திரு. எஸ். வசந்தகுமார், மாணவர்கள் சார்பில் செல்வி வனஜாராணி கண்ணுத்துரை ஆகியோரும் உரையாற்றினார்கள். யாழ். சாலை முகாமையாளர் திரு சு. மணிவாசகன் நன்றி கூறினார்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (இ-3)

## சகல முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட வேண்டும்

### பொலிஸ் மா அதிபர் உத்தரவு

கொழும்பு, ஏப் 16

பொதுமக்கள் கொண்டு வரும் சகல முறைப்பாடுகளும் பதிவுசெய்யப்பட வேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் பணித்திருக்கிறார்.

சகல பொலீஸ் நிலையங்களுக்கும் இந்த பணிப்புரையை பொலிஸ் மா அதிபர் எர்னஸ்ட் பெரேரா அனுப்பி வைத்திருக்கிறார்.

உத்தரவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

பாதுகாப்புக் காரணங்களுக்காக கடந்த காலங்களில் பொலிஸ் நிலையங்களைச் சுற்றிப் போடப்பட்ட தடைகள், வீதி வளைவுகள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும்

பொலிஸ் நிலையப் பிரதான கட்டடத்துக்கு வெளியே பொதுமக்களை வரவேற்று உபசரிக்கும் பிரிவு உடனடியாக அமைக்கப்பட வேண்டும்.

பொதுமக்களின் முறைப்பாடுகளை பொலிஸ் நிலையங்களில் ஏற்றுக்கொள்ள மறுப்பது இனிமேலும் பொறுத்துக்கொள்ளப்படமாட்டாது.

- இப்படி பொலிஸ் மா அதிபரின் உத்தரவு கூறுகிறது. (ஒ-எ)


## பிறந்த நாள் வாழ்த்து



★ செல்வி சிந்து ★

சரவணை மேற்கு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தேவராசா சண்பகாவதி தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி சிந்து தனது முதலாவது பிறந்த நாளை இன்று 16-04-1990 திங்கட்கிழமை பிரான்ஸ் நாட்டில் Blanc mesnil என்னுமிடத்திலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அக்கா சுமதி, அண்ணாமார் சுரேன், சுவேன், சுமன், சுகுணன் ஆகியோரும் பிரான்ஸ் நாட்டிலுள்ள அண்ணாமார் கேதீசன், சிவா, குமார், நாதன் அத்தான், மற்றும் சரவணையிலுள்ள அம்மம்மா, பெரியப்பா குடும்பத்தினர், சித்தப்பா குடும்பத்தினர், பெரியையா குடும்பத்தினர், பெரிய மாமா சின்ன மாமா குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சிந்துவை பல்கலைகளும் கற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றனர்.

(12922)


### சட்டவிரோத---

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மின் தாக்குதலுக்கு ஆளானார்.

பக்கத்துத் தோட்டத்தில் நின்றிருந்த இறந்தவரின் சகோதரன் ஓடிவந்து தடியொன்றினால் கம்பியை அகற்றி இருவரையும் மீட்டுள்ளார்.

ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ற வழியில் பாலச்சந்திரனின் உயிர் பிரிந்துவிட்டது. அவரது மனைவி மங்களேஸ்வரி வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். (ஒ-164)

### பிரபா---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

இதேவேளை—

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈரோஸ் இயக்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள விரிசல் நிலைகுறித்துப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.

கடந்த வாரம் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகக் கொழும்பு சென்றிருந்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித்தலைவர் திரு. கோ. மகேந்திரராசாவுடனும், மட்டக்களப்புப் பிராந்திய பொறுப்பாளர் திரு. கரிகாலனுடனும், ஈரோஸ் செயலதிபர் திரு. பாலகுமாரன் பேச்சுக்கள் நடத்தியிருந்தார்.

சமரசப் பேச்சுக்கள் மேலும் தொடரும் என அறியவருகிறது. (அ-3)

## பொலீஸாருக்கு ஆட்திரட்டல்; யாழ்.நகரில் நேர்முக பரீட்சை

### வெள்ளியன்று ஆரம்பமாகும்

கொழும்பு, ஏப் 16

வடக்கு கிழக்கு மாகாணப் பொலீஸ் படைக்கு ஆட்திரட்டுவது சம்பந்தமான நேர்முகப் பரீட்சை மற்றும் மருத்துவ பரிசோதனை இவ்வாரம் ஆரம்பமாகவுள்ளன.

முதலில் எதிர்வரும் வியாழன் மட்டக்களப்பில் இப்பரீட்சைகள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை முதல் யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாறை பொலீஸ் அதிபர்களின் பிரிவுகளில் இப் பரீட்சைகள் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை முதல் திருகோணமலை பொலீஸ் அதிபர் பிரிவில் இப் பரீட்சைகள் தொடங்கும்.

யாழ்ப்பாணத்துக்கான நேர்முகப் பரீட்சைக் குழு போதைப்பொருள் பணியகப் பணிப்பாளர் திரு. பி. ஏ. ஜெகநாதன் தலைமையிலும்,

வவுனியாவுக்கான குழு ரிசேர்வ் சிரேஷ்ட பொலீஸ் அதிபரான திரு. எம். டி. சி. சப்ரமாது தலைமையிலும் -

திருகோணமலைக் குழுவுக்கு சட்டம் - ஒழுங்கு பிரிவு பொலீஸ் பிரதி மா அதிபரின் உதவியாளர் திரு. கே. சற்குணராஜா தலைமையிலும் பணிபுரியும்.

மட்டக்களப்பு நேர்முகப் பரீட்சைக்குழுவுக்கு பொலீஸ் திணைக்கள தேர்தல் பிரிவு பணிப்பாளர் ஏ. ஜோசப், ணைக்குழுவுக்கு பொலீஸ் அதிபர் ஜோர்ஜ் நிக்கலசும் தலைமை வகிப்பர்.

வடக்கு - கிழக்கு மாகாணப் பொலீஸ் படைக்கு பத்தாயிரம் பேரைத் திரட்ட அரசு உத்தேசித்துள்ளது.

கடந்த மார்ச் 31 வரை விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்கள் மட்டுமே இப்பரீட்சைகளுக்கு அழைக்கப்படுவர். (ஒ-ா)

### பட்டதாரிகளுக்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி பெற்று வெளியேறினால் நாட்டில் பெரும் வேலை இல்லாப் பிரச்சினை ஏற்படும் என அரசுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காகவே முன்கூட்டியே வேலை வாய்ப்புத் திட்டம் தயாரிக்கப்படுவதாக அமைச்சர் சொன்னார்.

வியாபாரத்துறையில் முகாமைத் துறை பயிற்சியளித்தல், தொழில் முயற்சிகளுக்கு வங்கிக் கடன் அளித்தல் உட்பட பல விடயங்கள் இத்திட்டத்தில் அடங்கும் என்று அமைச்சர் அத்துலத் முதலி மேலும் தெரிவித்தார். [உ]

### அபிவிருத்தி வேலைகளை துரிதப்படுத்த

## புனர்வாழ்வு அமைச்சர் அதிகாரி தமிழ்ப் பகுதிகளுக்கு வருகிறார்

கொழும்பு, ஏப் 16

புனர்வகழ்வு, புனர்நிர்மாண அமைச்சர் திரு. ஏ. எம். எஸ் அதிகாரி விரைவில் வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொள்ள இருக்கின்றார்.

மாகாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்நிர்மாணப் பணிகளைத் துரிதப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமுகமாக இவ் விஜயத்தை மேற்கொள்ள விருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்வரும் [illegible] 9ஆம் திகதி அமைச்சர் [illegible] விஜயம் செய்ய [illegible]

வெளிநாட்டு உதவியுடன் நிறுவப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டம் ஒன்றை அமைச்சர் அன்று திறந்து வைப்பார்.

அண்மையில் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது, வடக்கு, கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு புனர்நிர்மாண வேலைகளை துரிதப்படுத்தும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வற்புறுத்தியது தெரிந்ததே.

அதைத் தொடர்ந்தே அமைச்சர் திரு அதிகாரியின் விஜயம் அமைகிறது. (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்ப சுகாதார கவனிப்பு திட்டத்தின் கீழ் நியமனமானோர்

கொக்குவில், ஏப். 16

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் ஆரம்ப சுகாதார கவனிப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றவர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது

இப்பயிற்சிநெறி ஐக்கிய ராஜ்யத்தின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் நடத்தப்பட்டது.

சித்தியடைந்தோர் இம்மாதம் 18ஆம் திகதி யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிலுள்ள பிரதேச சுகாதார சேவைப் பகுதிகளில் தமது கடமைகளைப் பொறுப்பேற்பர்.

நியமனம் பெற்றோர் விபரம் வருமாறு:-

**யாழ்ப்பாணம்**

கனகு புனிதகுமார், தர்மலிங்கம் சுரேஸ்குமார், சணபதிப்பிள்ளை ஜெகதீசன். சங்கரப்பிள்ளை கோகுலவரதன், பசுபதி காந்தரூபன், சிதம்பரநாதன் அருட்செல்வன், பத்மநாதன் சிவகுமார், சுந்தையா தியாகலிங்கம், இராஜதுரை முருகானந்தன், சுப்பிரமணியம் சிவநேசராசன். சிவரட்ணம் ஜீவராசா, சச்சிதானந்தராசா பாஸ்கரன், ஜெகநாதன் விவேகானந்தன், சிவப்பிரகாசம் குணேசலிங்கம், சுந்தப்பு இளங்கோ, வே. முகுந்தன், இ. நந்தகுமார்.

**திருகோணமலை**

செல்லத்துரை உதயசீலன், மாணிக்கவாசகர் மோகனக்குமாரன், கணேசலிங்கம் கிருபானந்தன், எஸ். எஸ். ஹசன், அப்துல் மஜீட் சாகிர்.

**மட்டக்களப்பு**

செல்வராசா ரஞ்சன்.

**வவுனியா**

கணபதிப்பிள்ளை தினகரன், செய்னுல் ஆப்தின் ஆசிம், சின்னையா சுப்பிரமணியம்.

கிராமிய சுகாதார உதவியாளர்களாக நியமனம்பெற்றோரும் அவர்களுக்கானசுகாதாரக்கூறுகளும் வருமாறு:-

**தெல்லிப்பளை**

என். ரஞ்சினி, த. தயாமணி, ந. சாலேஸ்வரி, சி. சித்திரா, இ. நகுலேஸ்வரி. மா. கிருஷ்ணகுமாரி, கே. கோமலாதேவி.

**கோப்பாய்**

க. கலையரசி, து. விக்கினேஸ்வரி, ச. வசந்தாதேவி, அ. கவிதா, த. சிவனேஸ்வரி, க. ஜெயந்தி.

**பருத்தித்துறை**

ஈ. யோசேஸ்வரி, ரி. யோகேஸ்வரி.

**சாவகச்சேரி**

பி. சித்திராதேவி.

**ஊர்காவற்றுறை**

ஏ. சுகதா.

**கிளிநொச்சி**

எஸ். சியாமளா, என். விமலாம்பிகை, பி. திவ்வியலட்சுமி, என். சந்திரபவானி, ரி. பரமேஸ்வரி, கே. சிவஞானதேவி, ஜே. எலிசபெத், கே. கனகசுகிர்தா.

**யாழ்ப்பாணம்**

அ. உதயசந்திரிகா.

**முல்லைத்திவு**

என். சிவகங்கா, ஆர். தயாபதி, கே. கலாநிதி, எம். புஸ்பாதேவி, எஸ். சரஸ்வதி, எஸ் நீற்றா மரியராணி, எம். டெல்சி, ஈ. அனிற்றா, வி. பஞ்சுளா, வி. சாந்தகுமாரி, கே. கோமலேஸ்வரி, ஏ. தங்கராணி, கே. கலாவதி, எஸ். உதயகுமாரி.

**வவுனியா**

எஸ். வசந்தராணி, எஸ். சங்காதேவி, ரி. இராஜேஸ்வரி, ஏ. பற்றிமாஜெயந்தி கே. சந்திரிகா, ரி. மஞ்சுளா.

**மன்னார்**

எஸ். சரஸ்வதிதேவி, ஐ. இராதா பரமேஸ்வரி, ஆர். றெஜீனா, அருள் ஒலிகுலாஸ், ரி. மேரி கொலஸ்ரிகா, எஸ். கலாநிதி, எம் விக்கினேஸ்வரி. (இ-69)

### மணிபல்லவ....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு விழா நிகழ்ச்சிகளில் முதலாவதாக நாவலர் பெருமான், மகாகவி பாரதியார், தெய்வப்புலவர், திருவள்ளுவர் ஆகியோரின் உருவச் சிலைகளும் மற்றும் பெரியார்கள் எண்மரின் உருவப்படங்களும் வரவேற்று நன்றி கூறும் வண்ணமணிப் பலகையும் திரை நீக்கம் செய்யப்படும்.

பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா, துர்க்கா துரந்தரி, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர், பேராசிரியர் கா. சிவத்தம்பி உதவி அரசாங்க அதிபர் திரு. க. தண்முகநாதன், அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் ஆகியோர் முறையே திரை நீக்கங்களைச் செய்வார்கள்.

16 ஆம் திகதிய கலைவிழா இரவு 7.15 மணிக்கு கானமூர்த்தி பஞ்சமூர்த்தி குழுவினர், எஸ். ஆர். சுந்தரம், என். ஆர் சின்னராஜா குழுவினர், எஸ். எஸ். ஆனந்தன் குழுவினர் ஆகியோரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

வடக்குகிழக்குமாகாணசபை சமநலச்சேவை ஆணையாளர் திரு. க. பரமலிங்கம், வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. இ. பாலசிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவார்கள்.

இதைத் தொடர்ந்து ஓவியக் கலைஞர் மணியம், சிற்பக் கலைஞர் லோகநாதன். எழுத்தோவியர் சூடாமணி ஆகியோருக்கு பரிசில் வழங்கலும் கௌரவிப்பும் நடைபெறும். பேராசிரியர் கா. சிவத்தம்பி இவர்களைப் பாராட்டிப் பரிசில்களை வழங்குவார்.

இரவு 10.45 மணிக்கு ''மணிபல்லவம்'' மலர் வெளியீடு இடம் பெறும்.

பின்னர் சோதிடக் கலையின் பண்பும் பயனும் பற்றிய கலந்துரையாடல் ஒன்று கலாநிதி நா. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெறும். வித்துவான் சி. குமாரசாமி, சோதிட கலாமணி ஐ. சரவணபவன், ஜோதிட ஜோதி ஆசிரியர் பிரம்மஸ்ரீ செ. நடராஜ ஐயர், யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. மா. வேதநாதன் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுவார்கள்.

நள்ளிரவு 12 மணிக்கு ''எண்பதுகளில் ஈழத்துத் தமிழர்களின் பிரச்சனையும் கலை இலக்கியமும்'' என்ற தலைப்பில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் கருத்தரங்கு ஒன்று நடைபெறும் திரு. சிவா சுப்பிரமணியம், வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) கவிஞர் சு. வில்வரத்தினம், செல்வி அருந்ததி சபாநாதன் ஆகியோர் கருத்தரங்கில் பங்குபற்றுகின்றார்கள்,

17 ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சிகளுக்கு திரு. சி. இரத்தினசபாபதி தலைமை வகிப்பார்.

அப்பொழுது கருத்துரை கவியரங்கு. நடனம் ஆகியவையும் நாடகங்களும் காலை 4 மணிவரை நடைபெறும். (ச)

## யாழ். பஸ் நிலையத்துக்கு பொது மலசலகூடம்

### அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் பொதுமல சல கூடம் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரச அதிபரிடம் வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடபிரதேச போக்குவரத்துச் சபை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினம் தலைமையில் போக்குவரத்துச் சபையின் அதிகாரிகள் குழு அரச அதிபரைச் சந்தித்தது.

மழை பெய்யும் காலங்களில் பஸ் நிலையத்தில் வெள்ளம் நிரம்புவதால், அருகில் உள்ள வடிகால்களைத் துப்புரவு செய்யவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இப் புனர்நிர்மாண வேலைகளுக்கான நிதியைப் பெற்றுத் தருமாறும் அரச அதிபரிடம் கோரப்பட்டது. (இ-3)

### அன்னை பூபதி--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர்கள் தெரிவித்துள்ளனர்.

அன்னை பூபதி உண்ணாவிரதமிருந்த மட்டக்களப்பில் மிகப் பெரிய அளவில் உண்ணாவிரதமும் நினைவுக் கூட்டமும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது அங்கு மாமாங்கப் பிள்ளையார் கோவிலில் பிரதான இறுதி நாள் நிகழ்ச்சிகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல திருகோணமலையில் சிவன் கோயிலிலும் யாழ்ப்பாணத்தில் நல்லூரிலும், வவுனியாவில் நகரசபை மைதானத்திலும் இறுதி நாள் பிரதான நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது (அ)

### தமிழர் பிரச்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கியமாக பேச்சில் இடம் பெற்றன.

அவருடன் பேசியதில் இருந்து தமிழர் பிரச்சினை குறித்து அவர் நிரந்தர அமைதிக்கான தீர்வு ஒன்றை எடுத்துள்ளார் என்பதை உணர முடிந்தது மிக விரைவில் பெரும் மாற்றங்கள் வரலாம் என்று எம்மால் ஊகிக்க முடிந்தது.

ஆயுத கையளிப்பு என்று அரசாங்க தரப்பில் எப்போதும் கூறப்படுகிறது— திரும்பத்திரும்ப இதைப் பற்றிக் கூறுவதால், சிங்கள இராணுவ அடக்குமுறை மீண்டும் எழக் கூடிய சூழ்நிலை உருவாகும் என்று மக்கள் நினைக்கிறார்கள் என்று ஜனாதிபதியிடம் தெரிவித்தோம்.

இப்படி அவர் கூறினார்.

அவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இ. பரராஜசிங்கமும் உடனிருந்தார் (இ-3)

## போலந்திடம் ரஷ்யா மன்னிப்பு

மாஸ்கோ, ஏப் 15

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது சோவியத் சர்வாதிகாரி ஸ்டாலினின் இரகசியப் பொலீஸ் படை சுமார் 15 ஆயிரம் போலந்து பிரஜைகளைப் படுகொலை செய்த சம்பவத்துக்கு சோவியத் யூனியன் அரசு போலந்திடம் பகிரங்க மன்னிப்புக் கோரியது.

படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டவர்களின் புதைகுழிகளில் இருந்து சுமார் 4 ஆயிரம் சடலங்களே கண்டுபிடிக்கப்பட்டன' ஏனையோரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. (எ)

### சேமிப்பு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களோ, உயிரிழப்போ ஏதுமின்றி ஒரே இடத்தில் எமது வங்கி இயங்கிவந்திருக்கிறது இறைவன் அருளும், மக்களின் ஒத்துழைப்புமே அதற்குக் காரணம்.

வங்கி அதிகாரிகள், ஊழியர்கள் வாடிக்கையாளர்கள் அனைவரும் ஒரு குடும்பம் போல் கடந்த காலத்தில் செயற்பட்டு வந்திருக்கிறோம் நமது வெற்றிக்கு இதுவே வழிகாட்டியது. இதே பாரம்பரியத்தை தொடர்ந்து பேணுவோம் என உறுதி கூறுகிறேன்.

வாடிக்கையாளர்களுக்கு நல்லசேவையை துரித கதியில் வழங்குவதற்காக எமது வங்கிச் சேவை விரைவில் கம்பியூட்டர் மயமாக்கப்படும் - என்றார்.

இந்த நிகழ்ச்சியில் பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் பங்குபற்றினர். (உ-3)

### தமிழ்---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

யும்.

இத்திட்டத்தின் கீழ் தகுதியான நூல்களை தெரிவு செய்ய ஆறு பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சச் செயலாளர் திரு. இ. ஜே. சற்குணராஜா சொன்னார் [உ-எ]

இன்றைய № 1 நீலசோப்
தேசிக்காய் வாசனையுடன்
எம்டீ நீல சோப்
எம்டீ என்ரபிரைஸஸ், அச்சுவேலி.

# உதயன்

16 - 04 - 1990 திங்கட்கிழமை

சிக்கனமுடன் சலவைக்கு
EMDEE BARSOAP
எம்டீ பார்சோப்
எம்டீ என்ரபிரைஸஸ். அச்சுவேலி.

## புத்தாண்டை முன்னிட்டு சைக்கிள் ஓட்டப்போட்டி

### நேற்று யாழ் நகரில் இடம்பெற்றது

குருநகர், ஏப். 16

புத்தாண்டை முன்னிட்டு யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவால் நடத்தப்பட்ட இருபாலாருக்குமான சைக்கிளோட்டப் போட்டிகள் நேற்றுக்காலை நடைபெற்றன.

ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டத்தை யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. பாலசிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

முடிவுகள்வருமாறு: 1ஆவது இடம்: திரு. அ. துரைமணி, 2ஆவது இடம்: திரு. சி. வை. கைலைநாதன், 3ஆவது இடம்: திரு. வை. மகாலிங்கம்.

பெண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டத்தை யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை தொடக்கி வைத்தார்.

முடிவுகள்வருமாறு: 1ஆவது இடம்: செல்வி கிறேசென்சியா, (சென்றோக் விளையாட்டுக் கழகம்), 2ஆவது இடம்; செல்வி கி. அ. அன்ரனிக்கா, 3ஆவது இடம்: செல்வி மேரிலதா. (ஒ-51)

## யாழ். பொலீஸ் நிலையங்களில் தமிழிலேயே கருமங்கள்

### அடுத்த மாதம் முதல் அமுல்

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ். மாவட்டத்தில் உள்ள பொலீஸ் நிலையங்களில் முறையீடுகள், பிரதிகள் வழங்கும் நடவடிக்கைகள் உட்பட சகல வேலைகளையும் அடுத்த மாதத்தில் இருந்து தமிழிலேயே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் பொலீஸார் இங்கு வந்துசேர்ந்த பின்இவ்வேலைகள் ஆரம்பிக்கும்.

இதுவரை காலமும் பொலீஸ் முறைப்பாடுப் புத்தகங்கள், மற்றும் முறையீட்டுக் கொப்பிகள் யாவும் ஆங்கிலத்திலும், ஒருசில தமிழிலும் எழுதப்பட்டு வந்தன. புதிய முறையின் கீழ் சகல வேலைகளும் தமிழிலேயே நடைபெற இருப்பதாகத் தெரிய வருகிறது. (இ-3)

### மலையகத்தில் கைதான

## ஈரோஸ் ஆதரவாளர் ஐவரை விடுதலை செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, ஏப். 16

மலையகத்தில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐந்து ஈரோஸ் ஆதரவாளர்களையும் உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச, நீதி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்துக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

மலையக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இராமலிங்கத்தின் செயலாளர் திரு. வரதராஜன், வெலிக்கடை சிறையிலுள்ள திரு. நடராசா மற்றும் மூன்று ஈரோஸ் ஆதரவாளர்களையும் ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் உத்தரவிடப்பட்டும் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை.

ஈரோஸ் குழுவினர் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்தபோது இந்த விவாகரத்தை எடுத்துக் கூறினார்.

அதை அடுத்து ஜனாதிபதி -ஈரோஸ் குழுவினர் பேச்சின் போது கலந்துகொண்ட ஜனாப் ஹமீத்திடம் அந்த ஐவரையும் உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு திரு. பிரேமதாச பணித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக ஈரோஸ் எம். பி. திரு. ரட்ணராஜா இன்று மீண்டும் நீதி அமைச்சர் ஜனாப் ஹமீத்தை சந்திக்க உள்ளார்.

## சேமிப்பு - முதலீட்டு துறைகளில் பாமர மக்களுக்கு ஊக்குவிப்பு

### இலங்கைவங்கிதிட்டம்பற்றி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 16

கல்வி அறிவு குறைந்தவர்களையும் சேமிப்பு, முதலீடு ஆகியவற்றில் ஊக்குவிக்கும் வகையில் அமைந்தபல திட்டங்களை இலங்கை வங்கி நடைமுறைப்படுத்த இருக்கிறது.

இலங்கைவங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் புத்தாண்டு தினத்தன்று நடந்த வைபவத்தில் பேசுகையில் இலங்கை வங்கி வடபிரதேச உதவிப் பொது முகாமையாளர் திரு. வி. ஜே. வின்சன்ட் மேற்கண்டவாறு கூறினார்.

ஆஸ்பத்திரிவீதிக் கிளையின் பிரதான முகாமையாளர் திருமதி க. துரைராஜாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இவ்வைபவத்தில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

பாமர மக்களின் உயர்வு முக்கியமானது? வங்கிகளின் உண்மையான சேவை பாமர மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். அந்த வகையில் இலங்கை வங்கி பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. ஆகவே இந்தத் திட்டங்களைக் கிராமப்புற மக்களும் பயன்படுத்தவேண்டும்

இப்படி அவர் கூறினார்.

இந்தவைபவத்தில் வடபிரதேச செயற்பாட்டு முகாமையாளர் திரு. மு. கனகரத்தினம், பிராந்திய முகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தி உட்பட ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (இ-3)

## சூழல் பாதுகாப்புத் திட்டம்; அரசு ஏற்றுக் கொண்டது

கொழும்பு, ஏப் 16

மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை தயாரித்த தேசிய சூழல் பாதுகாப்புத்திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இத்தகவலை அதிகாரசபையின் தலைவர் திரு. எஸ். ஏ. ஜினதாஸ தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி திரு. பிரேமதாஸா, பிரதமராக இருந்தபோது தெரிவித்த யோசனைகளின் அடிப்படையில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக திரு. ஜினதாஸா தெரிவித்தார்.

இத்திட்டம் விரைவில் அமுல் செய்யப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

காடுகள் வளர்ப்பு, வனவிலங்கு பாதுகாப்பு, காணி பாவனைமுறை, கடற்கரை பாதுகாப்பு, சனத்தொகை கட்டுப்பாடு, சுகாதாரம் பேணுதல் ஆகியவற்றை உள்ளடக்கியவாக இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவர் திரு. ஜினதாஸா சொன்னார். (ஒ-எ)

### தற்போதைய நிலையில்

## புதிய திட்டங்கள் எதனையும் மாகாண சபை செயற்படுத்தாது!

### பிரதம செயலாளர் உதயனுக்குத் தகவல்

திருகோணமலை, ஏப். 16

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் தற்போதைய நிர்வாகம் புதிய கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதிலும் அவற்றைச் செயற்படுத்துவதிலும் ஈடுபடாது.

மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு. சொ. கணேசநாதன் முன்கண்ட தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

மாகாண சபைக்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படும் வரை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட திட்டங்களையே மாகாண சபை அமுல் நடத்தும் என்றும் திரு. கணேசநாதன் தெரிவித்தார்.

''பெரும்பாலும் காபந்து அமைச்சரவை போன்றே எமது நிர்வாகம் இருக்கும். அபிவிருத்தி மற்றும் புனரமைப்புத் திட்டங்களை மட்டும் துரிதமாகச் செய்து முடிப்பதே எமது நோக்கமாக இருக்கும்''- என்றும் பிரதம செயலாளர் திரு. கணேசநாதன் உதயனுக்குத் தெரிவித்தார். (உ-எ)

## தேசிய வீரர் தினம்

கொழும்பு, ஏப். 16

இம்முறை தேசிய வீரர் தினத்தைப் பொருத்தமான முறையில் கொண்டாட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது சம்பந்தமாக நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பு கலாசார துணை அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மே 22 ஆம் திகதி தேசிய வீரர் தினம். அன்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பிரதான நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.

அன்றைய தினம் தேசிய வீரர்களின் திருவுருவப்படங்கள் ஊர்வலமாக சுதந்திர சதுக்கத்துக்கு எடுத்து வரப்படவுள்ளது பிரதான அம்சமாக அமையும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

## ஆய்வு நிறுவன கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.16

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் தொடர் கருத்தரங்கு நேற்று மாலை 5 மணியளவில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் வடக்கு - கிழக்கு பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான பூர்வாங்க ஆலோசனைகளும் அதுதொடர்பான வேறு விடயங்களும் ஆராயப்பட்டன.

## முல்லைத்தீவில் எழுச்சி விழா

முல்லைத்தீவு ஏப் 16

அன்னைபூபதியின் நினைவு எழுச்சி விழா முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை சர்வோதய கலைவாணி சிறுவர் பாடசாலை முன்றலில் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கைலாஸ் விழாவை ஆரம்பித்து வைப்பார்.

இதில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [இ-92]

### பல்கலைக்கழக மாணவருக்கு

## புத்தகங்களுடன் பரீட்சை எழுதும் புதிய திட்டம்!

கொழும்பு ஏப். 16

பல்கலைக்கழகப் பரீட்சைகளின் போது பரீட்சைமண்டபத்திற்கு தம்முடன் உசாத்துணைர்கு புத்தகங்களையும் கொண்டு சென்று அவற்றின் உதவியுடன்விடைஎழுத வசதி செய்யும் புதிய பரீட்சை முறை விரைவில் அமுல் செய்யப்படும்.

இத்தகைய பரீட்சை முறையை அமுல் செய்வதற்கு வசதியாக குறிப்பிட்ட பாடம் தொடர்பாக பல்வேறு நூல்களிலிருந்து குறிப்புகளைத் திரட்டி கல்வி நூல்கள் (Study Books) தனித்தனியாக சகல பாடங்களுக்கும் வெளியிடப்படும்.

இத்தகவலை உயர் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

உசாத்துணை நூல்களின் (Books for Refer) உதவியுடன் மாணவர்கள் விடையளிக்கும் பரீட்சை முறை பல நாடுகளில் வெற்றிசரமாகச் செயற்பட்டு வருகிறது.

மாணவரின் ''தேடற் பண்புகளை'' வளர்க்கும் நோக்குடன் இந்தப் பரீட்சை முறையை இலங்கையிலும் அறிமுகப்படுத்த திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

மேலும் பல்கலைக்கழகக் கல்வியைசிரமைப்பதுதொடர்பாக கல்வி, உயர்கல்வி அமைச்சர் சமர்ப்பித்த பல யோசனைகளை அமுல் நடத்த் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும், பல்கலைக்கழக பீடங்களும் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளன.

இந்த யோசனைகளின் படி 20 தொடக்கம் 50 பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஒருவர் என்ற வீதப்படிபோதனாசிரியர்கள் (Tutor) நியமிக்கப்படுவார்கள். இவர்கள் கல்விப் போதனையுடன், தாம் போதிக்கும் மாணவர்களின் பல்வேறு, தனிப்பட்ட பிரச்சினைகளையும் கவனத்தில் கொண்டு அவற்றுக்கு ஆலோசனை வழங்கும் விதத்திலும் செயற்படுவர்.

சில பல்கலைக் கழகங்களில் இடப் பிரச்சனையின் காரணமாக ஒரு நேரமே குறிப்பிட்ட பாடங்களை நடத்த முடிகின்றது. இதனைத் தீர்க்கும் முகமாக பல்கலைக்கழகம் போதனைகளை காலை, மாலை இருநேரமும் நடத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும் வகுப்புக்களை நடத்த மகாவித்தியாலயங்கள் மற்றும் மத்திய மகா வித்தியாலங்களின் கட்டடங்களும் பயன்படுத்தப்படவுள்ளன- என்றும் அவர் தெரிவித்தார். (உ-2)

## அரசின் தோல்வியை மறைக்க பாகிஸ்தானுடன் யுத்தமா?

### புதுடில்லி அரசு மறுப்பு

புதுடில்லி, ஏப் 15

உள் நாட்டு விவகாரங்களில் ஏற்பட்ட தோல்விகளைச் சமாளிக்கவே இந்தியா யுத்த மனோபாவத்தை பரப்பி வருகிறது என்ற குற்றச்சாட்டை புதுடில்லி அரசு மறுத்து உள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் செய்யத்முகமது இந்த மறுப்பை அரசின் சார்பில் வெளியிட்டார்.

பாகிஸ்தானுக்கு எதிரான யுத்தம் ஒன்றுக்கு மனோரீதியாகத் தயாராகும்படி இந்தியர்களுக்கு பிரதமர் சிங் அண்மையில் வேண்டுகோள் விடுத்து இருந்தார்.

அதைத் தொடர்ந்தே முன்கண்ட குற்றச்சாட்டை எதிர்கட்சிகள் விடுத்தன.

பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர் ஆகிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவதற்கு சிங் அரசு தோல்விகண்டுவிட்டது. அதை மூடிமறைக்கவே யுத்த மனோபாவம்ஒன்றைநாட்டில்பரப்பி வருவதில் புதுடில்லி அரசு ஈடுபட்டு வருவதாக இக் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. (எ)

## கனேடிய உதவியுடன் பாடசாலைகள் புனரமைப்பு

திருகோணமலை, ஏப் 16

கனேடிய அரசு மத்திய அரசின் ஊடாக வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு கல்விப் பணிகளுக்காக வழங்கிய 8கோடி ரூபா நிதியுதவியைக் கொண்டு 94 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் யாழ் மாவட்டத்தில் மாத்திரம் 39 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன என்று வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பதில் செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராசா தெரிவித்தார்.

இந்நிதியில் 89 டிசம்பர் மாதம் வரை 3 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றும் இவ்வாண்டில் மிகுதி நிதியைக் கொண்டு இந்த 94 பாடசாலைகளின் புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப் படுமெனவும் நிதியில் பெரும்பகுதி பாடசாலைக் கட்டட புனர் நிர்மாணப் பணிகளுக்கும் தளபாடங்களுக்கும் செலவிடப்பட்டு வருவதாகவும் திரு. சற்குணராசா தெரிவித்தார்.

## காணித்தகராறில் தாக்குண்ட வயோதிபர் மரணமானார்

யாழ்ப்பாணம், ஏப் 16

கடந்த மாதம் 23ம் திகதி தாக்குதலுக்கு ஆளான ஒருவர் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இறந்தவர் சின்னக்கடையைச் சேர்ந்த வி. சதாசிவம் [வயது 65] என்பவராவார்,

காணித் தகராறு காரணமாக இவரை அயல் வீட்டுக்காரர் ஒருவர் இரும்புக் கம்பியால் தாக்கியதில் படுகாயமடைந்ததாகச் சொல்லப்பட்டுயாழ்ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப் பட்டிருந்தார்.

சதாசிவத்தைத் தாக்கியதாகச் சொல்லப்படும் அயல் வீட்டுக்காரர் தலைமறைவாகிவிட்டதாகச் சொல்லப்படுகிறது [அ-9]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ... 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாய அலுவலகங்கள் விரைவில் மூடப்படலாம்?

திருகோணமலை, ஏப்ரல் 16

கடந்த ஜனவரி முதல் வடக்கு - கிழக்கில் உள்ள மாவட்டங்களில் இயங்கிவரும் விவசாய மேலதிகப் பிரதி பணிப்பாளர் அலுவலகங்கள் விரைவில் மூடப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த அலுவலகங்களில் பணிபுரியும் மேலதிக பிரதிப் பணிப்பாளர்கள் திருகோணமலையில் உள்ள வடக்கு-கிழக்கு விவசாயப் பணிப்பாளர் தலைமையகத்துக்கு விரைவில் மாற்றப்படவுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இதனால் இந்த அதிகாரிகள் தத்தமது மாவட்டக் கருமங்களை திருகோணமலையில் இருந்தே செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்தத் திணைக்கள ஊழியர்களின் கோப்புக்களும் பேராதனையில் உள்ள விவசாயப் பணிப்பாளரால் இன்னமும் அனுப்பிவைக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது.

இதனால் மாகாண சபைக்கு மாற்றப்பட்டுள்ள ஊழியரின் தாபன வேலைகள் செவ்வனே நடைபெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளனவாம். [உ-எ]

## முறைசாராக் கல்வி

தாளையடி, ஏப்ரல் 16

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள இரு பாடசாலைகளில் முறைசாராக் கல்விக்கான இலவச வகுப்புக்களை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் மோட்டார் வெளியிணைப்பு, இயந்திரம் திருத்தல் ஆகிய வகுப்புக்களும் குடத்தனை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தும்புவேலை வகுப்புக்களும் நடத்தப்படவுள்ளன.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சந்திரா பரமேஸ்வரன்

திருமதி சந்திரா பரமேஸ்வரன் காலமானார். இணுவில் K. K. S. வீதியைச் சேர்ந்த திருமதி சந்திரா பரமேஸ்வரன் (தற்பொழுது லண்டன்), கொழும்பில் காலமானார். இவர் திரு. பரமேஸ்வரன் (பொறியியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும் ஆர்த்தியின் அன்புத் தாயாரும், காலம்சென்ற திருநாவுக்கரசு (R. V. D B. பொறியியலாளர்) திருமதி சிவபாக்கியம் திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மகளும் ஊரெழு கிழக்கு தெய்வேந்திரன் தம்பதிகளின் அன்பு மருமகளும் திரு. மயில்வாகனத்தின் பேத்தியும், இந்திரா (லண்டன்), வசந்தி (லண்டன்), சுமதி, யசோதரா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் ''சிவபதி'' K.K.S. வீதி இணுவிலில் இருந்து காரைக்கால் மயானத்திற்கு திங்கட்கிழமை 16 - 04 - 1990 மாலை 4-00 மணிக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
குடும்பத்தின,

''சிவபதி''
கே. கே. எஸ். வீதி,
இணுவில். (12923)

### திரு. வல்லிபுரம் மயில்வாகனம்

சாவகச்சேரி நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கணேஸ் கூல்பார், வாசன் கூல்பார் ஆகியவற்றின் உரிமையாளரும், லேக்கவுஸ் பத்திரிகை, எலிபன்ட் கவுஸ் குளிர்பானம் ஆகியவற்றின் சாவகச்சேரி முகவருமாகிய திரு. வல்லிபுரம் மயில்வாகனம் அவர்கள் 15-04-1990 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளையின் அன்புச் சகோதரரும், கனகம்மாவின் அன்புக் கணவரும், வைகுந்தவாசன், நடேசபிள்ளை (கனடா), கணேசமூர்த்தி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகராணியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக 16-04-90 திங்கள் பிற்பகல் 2-30 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மகன்மார், மருமகள்

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. [12927]

### திருமதி திரேசம்மா இம்மனுவல்

திருமதி திரேசம்மா இம்மனுவல் காலமாகிவிட்டார்.

இவர் காலம்சென்ற இம்மனுவலின் அன்பு மனைவியும், காலம்சென்ற அருளானந்தம் மரியம்மாவின் அருமை மகளும், கொன்செப்ரா (யாழ். புனிதவளன் அச்சகம்), மங்களதாஸ் (யாழ். மாநகர சபை, நீர் வேலைப் பகுதி), அன்ரனிதாஸ், எட்மன்டா (கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் நேசத் தாயாரும், குணேந்தரன் (யாழ் மாநகர சபை, தீயணைப்புப் பகுதி), கரியற்ரா சறோ (ஆசிரியை, கார்மேல் பாலர் பாடசாலை, யாழ்ப்பாணம்), மேரிபிறேமா ஆகியோரின் அருமை மாமியாரும், அல்பிறட் பாலசிங்கத்தின் (யாழ். புனிதவளன் அச்சகம்) சகோதரியும், பிலோமினாவின் மைத்துனியும், றஜிதா, நேருஷா, குயிலினி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 1/14, புது வீதி, கொய்யாத் தோட்டத்திலுள்ள அவரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்துக்காக திங்கட்கிழமை (16-4-90) பிற்பகல் 4-00 மணிக்கு புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

இல. 1/14, புது வீதி,
கொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம். [12928]